பாயிரம்

வான் சிற

வானின் றுலகம் வழங்கி
தானமிழ்தம் என்றுணரற் பா

நீரின்றமையா துலகெனின் யா
வானின் றமையா தொழுக்கு.



வள்ளுவர் சிறப்பிக்கும்

'வான்' எது

புலவர் - மு.தெய்வநாய

மெய்ப்பொருள் பதிப்பகம்

வள்ளுவர் சிறப்பிக்கும்

'வான்' எது?

புலவர் மு. தெய்வநாயகம்

மெய்ப் பொருள் பதிப்பகம்

2ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,

அயன்புரம் :: சென்னை-23

முதற் பதிப்பு அக்டோபர்-1971

விலை ரூ. 1—00

சுசீ பிரிண்டர்ஸ், சென்னை-15.

மதிவல் உரை

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை
எம். ஏ [ஆங்கிலம்] எம்.ஏ.[தமிழ்] விசாரத் [இந்தி] எல், டி
ஆசிரியர்— முப்பால் ஒளி- திருக்குறள் மணிவிளக்கவுரை.

உலகத்தமிழ் அரங்கிலும் பல்கலைக்கழகங்களிலும் கிளிப்பிள்ளை வாய்பாடுகளே பண்டாரகப் பட்டங்களுக்குரிய ஆய்வுக் கட்டுரைகளாக வழங்கி வரும் இக்காலத்தில் 'வள்ளுவர் சிறப்பிக்கும் வான் எது?' என்பது போன்ற சீரிய ஆராய்ச்சிப் பிழம்புகள் ஒரு தனியார் வெளியீடாக வருவதைக் கண்டு நான் வியப்பெய்துகின்றேன். ஆசிரியர் முடிபினை அப்படியே ஏற்காத எனது நிலையிலும் கூட அவர் வாத அடிப்படையும் தருக்கமுறை வாதப்போக்கும் அப்பழுக்கற்றவை, ஒப்புயர்வற்றவை, வள்ளுவ ஆராய்ச்சித் துறையைப் புரட்சிகரமாக மாற்றுபவை என்பதைக் காண நான் இறும்பூது எய்துகிறேன். அவர் முடிவுகள் கூடப் புதிய ஆராய்ச்சிகளுக்கு வாயில்களாக அமையக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

ஆசிரியர் இயற்றிய பிற ஆய்வேடுகளிலும், குறிப்பாக ஐந்தவித்தான் யார்? நீத்தார் யார்? என்பவைகளிலும் ஆசிரியர் இதே வாதத்திறமையைக் காட்டியுள்ளார். ஆயினும் அச்சீரிய ஏடுகளுள்ளும் சீரிய ஏடாய் வாத ஆய்வு முறைக்கு ஓர் அழகிய எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது 'வான் எது?' என்ற இவ்வாராய்ச்சி ஏடு.

வேறுவேறு சமயஞ்சார்ந்தவர்கள் ஆராய்ச்சி கூட ஆராய்ச்சி என்ற முறையில் ஒருதிசைநோக்கு வனவே என்பதை இவ்வேடு காட்டுகிறது. இவ்வேடு 12-ம்பக்கத்தில் மேற்கோள் காட்டியுள்ள சைவசித்தாந்தப் பேரறிஞர் நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை 'வான்' பற்றிக்கூறும் கருத்தே, ஆசிரியர் வாத ஆய்வுப் போக்கிற்கு அடிப்படை வழிகாட்டியாய் அமைந்து, அவர் முடிவுக்கு நம்மை இட்டுச் செல்ல உதவி விடுகிறது என்பது வியப்பார்வ மூட்டத்தக்க செய்தி ஆகும். அவ்வறிஞர் 'ஆற்றல்' முடிவுடன், குருகுலத்திருக்குறள் பீடம் அழகரடிகளாரின் 'அமிழ்தக்'கருத்தும் என் கருத்தும்யாவும், திரண்டு ஆசிரியர் முடிவுக்கு அரண் செய்துவிடுவது காண்கிறேன்.

திருக்குறளாராய்ச்சி, எதிர்ப்பும் மாறுபாடும் இல்லாததனலேயே இன்றுவலுவிழந்து கிடக்கிறது. அதற்கு சமஸ்கிருத மூலம், சுமிருதிமூலம் தேடிய வெற்றுராய்ச்சிகள் ஒய்ந்துவிட்டன. பகவத்கீதையுடன் அதனை ஒப்பிட்டுக்காண விழைவோர் இரண்டிலுமே மெய்ம்மைப்பொருள்காணமுடியாமல் அலமருகின்றனர். விவிலிய திருக்குரான் ஒப்புமை காணும் முயற்சிகள் புதுமையும் விருவிருப்பும் உடையன என்று கருதுகிறேன். புலமையும் ஆய்வாற்றலும் வாய்ந்த ஆசிரியர் முயற்சி அம்மேலை வாயில்களைத் திறக்க உதவுமென்று எதிர்பார்க்கிறேன்.

வெல்க வள்ளுவ மெய்ம்மை ஆராய்ச்சி ஒளி.

கா. அப்பாத்துரை.

மதிப்புரை

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம்,
தலைவர் தமிழரசுக் கழகம்.

புலவர் தெய்வநாயகம் இயற்றியுள்ள 'வள்ளுவர் சிறப்பிக்கும் வான் எது?' என்னும் நூலை ஆழ்ந்து படித்தேன். ஆய்ந்தும் படித்தேன். பிற புலவரெவரும் ஈடுபடாத ஒரு புதிய ஆராய்ச்சியில் ஆசிரியர் ஈடுபட்டுள்ளார். 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தைக் கடவுள் வாழ்த்தை அடுத்து வள்ளுவர் வைப்பானேன்? என்பது ஆசிரியருக்கு எழுந்த ஐயப்பாடு.

இந்த ஐயந்தெளிய ஆசிரியர், இதுவரை திருக்குறளுக்கு எழுதப்பட்டு வெளியாகியுள்ள உரைகள் அனைத்தையுமே ஆராய்ந்துள்ளார் இத்துறையில் இவர் காட்டியுள்ள ஆர்வமும் எடுத்துக் கொண்ட உழைப்பும் போற்றற்குரியனவாகும்.

'வான்' என்னும் சொல்லுக்குப் பொதுவான பொருள் ஒன்றிருப்பினும் திருக்குறளில் கடவுள் வாழ்த்தையடுத்து வைக்கப்பட்டுள்ள காரணத்தாலேயே ஆசிரியர் சிறப்புப்பொருள் காண்கின்றார். ஆண்டவனை அடுத்துள்ள இடத்தில் இருப்பது அவன் அருள்தான். இதனை எவரும் மறுப்பதற்கில்லை. வள்ளுவரும் இந்தக் கருத்துடனேயே கடவுள் வாழ்த்தை அடுத்து வான்சிறப்பினை வைத்துள்ளார் என்பது ஆசிரியர் தெய்வநாயகம் கொள்கை.

ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம் பாராட்டத்தக்கதாகும். திருக்குறள் நவில்தொறும் நவில்தொறும் நயந்தரும் நயந்தரும் நூலாகும். இதனை ஆசிரியர் தெய்வநாயகம் இயற்றியுள்ள இவ்வாராய்ச்சி நூல் உலகுக்கு உணர்த்துகின்றது.

பாரதியார், ''அணிசெய்காப்பியம் ஆயிரம் கற்பராம், ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்கிலர்'' என்று கவியுள்ளம் காணத்தவறும் புலமையைச் சாடுகின்றார். திரு. தெய்வநாயகம் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்பதிலே ஈடுபட்டு, அமரர் பாரதியாரின் ஆசியைப் பெறுகின்றார்.

இந்நூல், புலவர் பெருமக்களால் போற்றப்பட வேண்டும். ஆசிரியர் மேலும் மேலும் சிறந்த ஆராய்ச்சி நூல்களைப் படைக்கும் வகையில் தமிழ் மக்கள் இவரை ஊக்குவிக்கவேண்டும்.

ஆசிரியர் தெய்வநாயகத்திற்குஎனதுபாராட்டு.

சென்னை,
15-10-71

ம. பொ. சிவஞானம்.

கருத்துரை

அருள்திரு. வி. டி. சகாயம், எம்.ஏ.

புலவர் தெய்வநாயகத்துடன் நெருங்கிப் பழகவும், அவர் எழுதிய திருவள்ளுவர் கிறித்தவரா? (1969); ஐந்தவித்தான் யார்? (1970) ஆகிய இரு நூல்களையும் பலமுறை துருவிப்படிக்கவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பை நன்கு மதித்து மகிழ்வுறுகின்றேன். அவர் தமது ஆய்வினைத் தொடர்ந்து இப்போதும் 'வான் எது?', 'நீத்தார் யார்?' ஆகிய இரு நூல்களை வெளியிடுகிருர். கிறிஸ்தவ இறையியர் வல்லுநர் அவர் கூற்றை ஏற்பரா? மறுப்பரா? என்ற ஐயம் உங்களுக்கெழலாம்.

கிறிஸ்தவம் செல்லுமிடமெங்கும் அந்தந்த நாட்டின் மொழி, இலக்கியம், பண்பாடு இவற்றின் அடிப்படையில் புதிய கருத்துக்களை வெளியிடுவதே அதன் இயல்பு. அம்முறை தமிழ் நாட்டிலும் செயல்பட்டிருத்தல் வேண்டும். தமிழ் நாட்டில் தோமையர் காலத்தே தோன்றிய தமிழ்த்திருச்சபையாகிய திருக்கூட்டத்துக்கே 'தமிழ்ச்சங்கம்' என்ற பெயர் சூட்டப்பட்டதெனக்கூறும் திருமறை, இறையியல் தமிழ் அறிஞரும் உளர்.

குறள் ஆய்வில் ஈடுபட்டோர் பெரும்பாலும் இடைக்கால உரையாசிரியர்களையே பின்பற்றி கூறினதையே கூறும் இக்காலத்தில் புலவர் கூற்று குறளுலகிலும் கிறிஸ்தவ உலகிலும் ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ணி வருவதில் வியப் பெதுவுமில்லை. திருக்குறளில் திறக்க இயலாது பல்லாண்டுகளாய்ப் பூட்டிக்கிடந்த 'ஐந்தவித்தான்', 'வான்', 'நீத்தார்', போன்ற பூட்

களைக் கிறிஸ்தவமாகிய திறவுகோலால் திறந்து காட்டும் ஆசிரியரின் கூற்று தமிழறிஞருக்குப் புதுமையானது. கிறிஸ்தவ சித்தாந்தங்களுக்கும் முரண்படாதது. குறளறியாக் கிறிஸ்தவர்களுக்கு மயக்கம் தருவது.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் புலவர் கூற்று உண்மைதானா? என்பதைத் தாங்களே கண்டுகொள்ளுமாறுகிலும்பைபிளைப்படிக்கவேண்டு வது அவர்கள் கடமையாகும். பைபிளைக் கற்ற கிறிஸ்தவர்களும், சிறப்பாக என் போன்ற இறை யியல் பயின்ற குருக்களும் இம்மட்டும் திருக்குறளைப் படியாதிருப்பின் இனிமேலாகிலும் காலத்தை வீண் போக்காது அதை ஆழ்ந்து படிக்கவேண்டுவது அவர்கள் பொறுப்பாகும். இவ்வாறு இருதிறத் தாரும் சேர்ந்து; முயன்று உண்மையைக் கண்டு; உளம் மகிழ்வோம்—வாரீர்.

இருதிறத்தாராகிய நாம், புதையல் மேலேயே அமர்ந்த பிச்சைக்காரனைப்போலவும், வெண்ணெய் கையிலிருக்க, நெய்க்கு அலையும் பேதையைப் போலவும் நமது பரம்பரைச்சொத்தை அறியாதவர் களாக தமிழ் நாட்டில் இன்னமும் காட்சியளிப் பானேன்?

வி. டி. சகாயம்.

1.B. ரிதர்டன் ரோடு
வேப்பேரி
சென்னை-7
15-10-1971

வான் சிறப்பு ஏன்?

திருவள்ளுவப் பெருந்தகை தன் நூலின் முதற் பகுதியாம் பாயிரத்தினுள், கடவுள் வாழ்த்திற்கு அடுத்து, வான்சிறப்பை வைத்துள்ளார். இதன் மூலம் திருவள்ளுவர் கொள்கையை நாம் உற்று நோக்கின், கடவுளுக்கு அடுத்த சிறப்பைப் பெறும் தகுதி வானுக்கு உண்டு என்றாகிறது. வான் சிறப்பிற்கு அடுத்து நீத்தார் பெருமை விளங்குவதால், வள்ளுவர் பெருமைப்படுத்தும் நீத்தாரினும் சிறப்புப்பெறும் தகுதி வானுக்கு உண்டு எனலாம்.

வள்ளுவர் பாயிரமாகிய முதல் நான்கு அதிகாரங்களுள், உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதியால் கடவுளையும் நீத்தாரையும் சுட்டுவதுடன், 'ஐந்தவித்தான்' என்றபெயரால், கடவுளும் நீத்தாரும் ஒன்றானவர்களே என்பதையும் தெளிவு படுத்துகிறார். ஐந்தவித்தான் என்ற நிலையில் கடவுளும் நீத்தாரும் ஒன்றே. எனவே கடவுளுடன் இணைந்த நீத்தாரினும் சிறப்புப் பெறும் 'வான்' எது? என்ற வினா எழுகிறது.

வான் சிறப்பு என்பதன் கீழுள்ள பாக்களை நோக்கினால், அவற்றுள் வள்ளுவர் பெய்துள்ள, மழை, புயல், விசும்பின் துளி, எழிலி என்னும் சொற்களால் வான்சிறப்பு என்பது, மழையைச் சிறப்பித்துக் கூறும் பகுதியே, என உரையாசிரியர் எண்ணினர் என்பது தெரிகிறது. ஆனால் கடவுளுக்கும் நீத்தாருக்கும் இடையே மழை வரவேண்டிய தேவை என்ன? என்பதை எண்ணிப்பார்த்த சிலருக்கு வான்சிறப்பு என்பது மழையை மட்டுமே கூறும் பகுதி எனக்கொள்ள உள்ளம் இடம்

தரவில்லை என்பது அவர்களுடைய விளக்கங்களால் விளங்குகிறது.

இவ்வதிகாரத்தை ஆய்ந்த அறிஞர் பெருமக்களுக்கும், இவ்வையம் தோன்றாமல் இல்லை. அவர்களும் இவ்வதிகாரத்தினால் விளக்கிக் காட்டப்படும் பொருளைத் தெளிவாய்க் கூற முடியா நிலையில் திகைத்து நிற்பதாகவே காணப்படுகிறது. மிகச் சிலரே இவ்வதிகாரத்தினால் சுட்டப்படும் உட் பொருளை நுணுகி ஆராய்ந்து அதன் அருகே சென்றுள்ளனர் எனக் கூறலாம். ஆயினும் வள்ளுவரின் உள்ளக் கொள்கையை அறிய முடியா நிலையில் அவர்களும் அதைத் தெளிவாக 'இதுதான் இதன் பொருள்' எனத் துணிந்து கூற முடியா நிலையில் நிற்கின்றனர்.

எனவே 'வான்சிறப்பு' அதிகாரப் பொருத்தம் உரைக்கும் உரையாசிரியர், அறிஞர் பெருமக்கள் இவர்களின் கருத்துக்களை முறையே நோக்குவோம்.

ஏன் ?

1. **பரிமேலழகர்:**-அஃதாவது அக்கடவுளது ஆணையான் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

2. **பரிதியார்:** பூலோகத்திலுள்ள தன்மதானஞ் செய்யும்போது மழையின்றி நடவாது: அங்ஙன் நடக்கில் வான்சிறப்புவேண்டும் என்றவாறு.

3. **மணக்குடவர்:** வான்சிறப்பாவது மழையினது தலைமை கூறுதல். இது, கடவுட் செய்கைத்தாத

லான் அதன்பிற் கூறப்பட்டது இஃது ஈண்டுக் கூறியது என்னையெனில், பின் உரைக்கப்படுகின்ற இல்லறமும் துறவறமும் இனிது நடப்பது மழை யுண்டாயின் என்றற்குப் போலும்: அன்றியும் காலத்தின் பொருட்டுக் கூறினார் எனினும் அமை யும்.

4. **காலிங்கர்:**– (முதற்குறட்பாவின் விளக்கத்தி னுள்) இனி மற்று இக்கடவுள் வணக்கமும் வான் சிறப்பும் துறவறம் இல்லற முதலாகிய எனைத் தொழுக்கத்துக்கும் இன்றியமையாப் பண்பின வாகலின் இவற்றின் பின்னர் அவ்விருவகை ஒழுக் கத்திற்கும் தொகைநிலைப்பாயிரம் உணர்த்துகின்ரு ராதலான் அவற்றுள் முன்னர் அவ்வீட்டு நெறிக் கியல்பாகிய துறவு நெறிப்பாயிரம் அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

5. **புலவர் குழந்தை:**– வான்-மழை. வான்சிறப்பு- மழையினது சிறப்புக் கூறுதல். அறம் பொருளின்ப மாகிய உலகியல் நடத்தற்கேதுவாகலின், மழை முப்பாற்கும் பொதுவாயிற்று. மழையின் சிறப் புணர்ந்து அதன் பயன்கொண்டு வாழ்தல் இதன் பயன்.

6. **தேவநேயப்பாவாணர்:** அஃதாவது இறைவன ருட்கு அடுத்தபடியாக, அவன் ஏற்பாட்டின்படி உலக நடப்பிற்கும் அறம் பொருளின்பப் பேற்றிற் கும் இன்றியமையாத துணைக்காரணமாகிய மழை யின் சிறப்பைக் கூறுதல்.

7. **டாக்டர். மு. வரதராசனர்:** வாழ்க்கையைக் கெடுக்கவல்ல வறுமையின் கொடுமையைப் பல

முறை எண்ணி எண்ணியே கடவுள் வாழ்த்தை யடுத்து வான்சிறப்பைக் கூறியுள்ளார்................ ....திருவள்ளுவர் காலத்தில் மழை இல்லை யானால் வாழ்வு இல்லை. இக்காலத்தில் பணம் இல்லை யானால் வாழ்வு இல்லை. இதுவே காலத்தால் நேர்ந் துள்ள வேறுபாடு. இந்த வேறுபாடு உணர்ந்தே திருவள்ளுவரின் கருத்தை உணரமுற்படவேண் டும்.

(வள்ளுவர் வாய்மொழி- பக் 40, 41)

8. **நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை:-** அஃதா வது மழையினது சிறப்புக் கூறுதல். முற்றறிவுடைய இறைவனை முதலாகவுடைய இவ்வுலகம் சிற்றறி வுடைய உயிர்களும் அறிவற்ற சடமுமாக உள்ளது. சத்தாகிய இறைவனைச் சதசத்தாகிய உயிர்கள் அசத்தாகிய சடத்தைக் கருவியாகக் கொண்டு அறிகின்றன. அவ்வாறு அறிவதற்கும், 'அவனரு ளாலே அவன்றாள் வணங்கி' என்றபடி, கடவுளின் அருள் விளக்கம் இன்றியமையாது வேண்டப்படு தலின் முதற்கண் கடவுள் வாழ்த்துக்கூறி, அதை யடுத்து ஈண்டு, அக்கடவுளை அறிதற்குக் கருவி யான அசத்தின்பாற்பட்டு ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும்வல்ல ஆற்றலை ஓராற்றாற் கடவுளோ டொப்ப இயற்கையிற்கொண்ட மழையினது சிறப் பைக் கூறுகின்றார். அசத்தைக் கொண்டு சத்தை அறியும் சதசத்தான உயிர்களுட் சிறந்த நீந்தாரது பெருமையை இதனை அடுத்துக் கூறுவர். அதை யடுத்து, சதசத்தால் அறியப்படும் சத்தோடு ஒற் றுமையுடைய அறத்தினது வலிமை இனைத் தெனக் கூறுவர்.

9. **பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்:** கட வுள் வாழ்த்து அதிகாரத்துக்குப்பின், மழையைக்

கடவுளாக உருவகித்து, அம்மழை உருவில் கடவுள் வாழ்த்தைத் தொடர்வது வான்சிறப்பு என்ற இவ் வதிகாரம்.

கடவுளது இன்பவடிவின், அன்புருவின் சின்னம் மழை: (பக் 387) இறைவாழ்த்து அதிகாரத்தில் கடவுளின் பண்பாற்றல்களையெல்லாம் தொகுத்துரைத்த வள்ளுவர் இந்த வான்சிறப்பு அதிகாரத்தில் வெளிப்படையாக மழைச்சிறப்பு மட்டுமே கூறுகின்றாராலும், உண்மையில் அவர் முதற் பொருள் மழையை வருணிப்பதன்று. கடவுளின் கருணையாற்றலை வகுத்துரைப்பதேயாகும். (பக் 390)

10. திரு. எம். சுப்பிரமணிய பிள்ளை: கடவுளுடைய தண்ணருளைக் குறிப்பதற்கு மழையே சிறந்த அறிகுறியாக இருக்கின்றது. மழைச் சிறப்புக் கூறுதல், திருவருட் சக்தி வணக்கங் கூறுதலாக முடிகின்றது.

11. குருகுலத்திருக்குறள் பீடம் அழகரடிகள்: 'வான் சிறப்பு' அதிகாரத்தில், மழையை அமிழ்தம் என்று ஆசிரியர் கூறுகிறார். ... ...
ஊற்று நீர், ஆற்றுநீர், கடல்நீர் முதலியவற்றிற்கு இல்லாத அமிழ்தத் தன்மை வான நீராகிய மழைக்கு மட்டும் இருப்பதைப் பார்த்தால் வான் வெளியிற் கலந்து விளக்கிக் கொண்டிருக்கும் மிக நுட்பமாகிய ஒரு முழுமுதற் பொருளின் அமிழ்தத் தன்மை அதாவது நிறைவேற்றுத் தன்மை மழையிற் கலந்து வருகின்றதென்பது ஆழ்ந்து கவனிக்குமிடத்துப் புலப்படும்.

(திருக்குறள் அறம் பக். 235, 236)

12. புலவர் வே. த. அர்ச்சுனனார்:—

வான் என்பது மேகம் அல்லது மழையாகும். ...உயிர்தோறும் வியாபித்திருக்கும் ஆண்டவனைப்

போலவே உலகத்தில் எல்லாப் பொருள்களாக வுருவாகித் தானுமோருணவுப் பொருளாய் நிற்கும் பெருமையிம்மழை யொன்றற்கே யுரியதெனக்கூறல் மிகையாகாது. ஓரறிவு முதலாய் ஆறறிவுவரையி லுள்ளஉயிர்கட்குச் சத்துள்ள உணவை வித வித மாகத்தந்து காக்கு முயர்வையுடையது. மழை நீரால் உலகத்தில் பலகாரியங்கள் நடைபெற்றுவரு கின்றன.

திருக்குறள் இடைப்பாயிரமும்—நூற்பாயிரமும்
பக் 63

13. ப.அருணசலம் எம். ஏ; எம். லிட்

கடவுள் வாழ்த்தை யடுத்து, வான்சிறப்பைக் கூறுவர். இறைவன் உயிர்களிடத்தில் கொண்ட அருட் செயலாக மழையைக் கூறுவர். அவன் அருளின் வடிவம் என்றும் மழையைக் கூறலாம். திருவெம்பாவை மழையில் உமாதேவியைக் காண்கிறது. இறைவன் அருளையே சித்தாந்தம் தேவியாகக் கூறும். திருப்பாவையும் இறைவன் அருட்கோலத்தை மழையில் காண்கிறது.

குறளின் செய்தி—பக்- 26, 27

மேலே நாம் காணும் உரையாசிரியர், ஆய்வாளர் ஆகியோரின் கருத்துப்படி 'வான் சிறப்பு' என்பது மழையைமட்டுமே சிறப்பித்துக் கூறும்பகுதி—மழைவாழ்த்துடன் கடவுளின் கருணை யாற்றலையும் தன்னகத்தே கொண்டபகுதி, என்ற இருவிதக் கொள்கையுண்டென்பது விளங்குகிறது.

இவ்விருவிதக்கொள்கைகளுள் சரியானது எது? வள்ளுவர் சிறப்பிக்கும் ,வான், மழையா? என்பவை களுக்கான விடையைக் காணுவோம்.

2 வான்

'வான்' என்னும் இச்சொல் இவ்வதிகாரத்தின் முதற் குறட்பாவிலும் ஈற்றுக் குறட்பாவிலும் எவ்வித மாற்றமுமின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விரு இடங்களிலும் அது சுட்டும் பொருள் என்ன? என்பதைக்கண்டால் அப்பொருளின் சார் பாக அமைக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பொருளையும் எளிதில் காணமுடியும்.

> *வான்நின்று உலகம் வழங்கி வருதலால்*
> *தான்அமிழ்தம் என்றுணரற்பாற்று.*

உலகம் வழங்கிவருவது வான் நின்று ஆதலால் அவ்வான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.

நீடுவாழ்வையளிப்பது அமிழ்தம். அவ்வமிழ்தம் என்றுணரும் சிறப்பினை யுடையது வான். வான் நின்றே உலகம் வழங்கிவருகிறது அவ்வான் இன்றேல் உலகம் வழங்குதல் இல்லை. பரிமேலழகர் இதற்கு விளக்கம் கொடுக்குங்கால்—

'உலகம்' என்றது ஈண்டுயிர்களை அவை நிலை பெற்று வருதலாவது பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டுவருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை, 'அமிழ்தமென்று உணர்க என்றார்'.

என விளக்கிக்காட்டுகிறார். இவ்விளக்கத்தினுள் உலகம் வழங்கிவருதலால் என்பதற்கு உயிர்கள் நிலைபெற்றுப் பிறப்பு இடையறுமல் எஞ்ஞான்றும் உடம்போடுகாணப்பட்டு வருதல், எனப் பொருள் விளக்கம் கூறுகிறார். இதன்மூலம் உயிர்கள் நிலை

பெற்றுப் பிறப்பு இடையருமல் எஞ்ஞான்றும் உடம் போடுகாணப்பட்டு வருவதற்குக் காரணமாய் விளங்குவது 'வான்' என்பது தெளிவுபடுத்தப் படுகிறது.

பிறப்பு இடையருமல் நடைபெறுவதற்குக் காரணமானவை யாவை? வித்திலிருந்து மீண்டும் வித்து தோன்றி, தோன்றிய வித்திலிருந்து மீண்டும் வித்து தோன்றுவதற்குக்காரணம் எது?

வித்து முளையாகி, வளர்ந்து, பூத்துக் காயா கிக்கனியாக வேண்டுமானுல் அதற்கு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் துணையும் வேண்டும். இவ்வைம் பெரும் பூதங்களில் ஒன்று குறைவு படினும் பிறப்பு இடையருமை அறுந்து விடும். ஆகவே இவ்விடத் தில் இவ்வைம் பெரும்பூதங்களுள் ஒன்றை மட்டும் தனியே சிறப்பித்துக் கூறமுடியாது. கூறினுல் அது பொருந்தாது.

ஆதிபகவன்முதற்றேயுலகு எனக் கடவுளை வாழ்த்திய வள்ளுவப் பெருந்தகை உலகம் வழங்கி வருவதற்குக்காரணம் 'வான்' என்று கூறுவதுடன் அந்த வானைச்சிறப்பித்துக் கூறவே ஒருதனி அதிகாரமும் இயற்றி அதற்குக்கடவுளுக்கு அடுத்த சிறப்புக் கொடுத்திருப்பாராஞல், அவர்குறிக்கும் 'வான்' கடவுளால் படைக்கப்பட்ட, படைப்பின் ஒரு பகுதியான உலகின் அமைப்புக்குக் காரண மான, ஐம்பெரும் பூதங்களுள் ஒன்ருன, மழையாக மட்டும் எவ்வாறு இருக்கமுடியும்?.

பெற்றிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்

எனக் கூறப்படும் கடவுள்வாழ்த்துச் செய்யுளினுள் நீடுவாழ்வைக் கொடுப்பவன் ஐந்தவித்தானாகிய கடவுள் எனக் கூறியவர், நீடுவாழ்வளிக்கும் அமிழ்தமாக விளங்குவது 'வான்' எனக்கூறும் பொழுது, அந்த வான் மழையாக மட்டுமே எவ்வாறு இருக்கமுடியும்? இங்கே 'வான்' என்னும் சொல்லில் வள்ளுவர் கடவுளுடன் இணைந்த ஏதோ ஒன்றைக் குறிப்பதாகக் கொள்ள நேரிடுகிறதே யன்றி, கடவுளால் படைக்கப்பட்ட மழையைக் கொள்ளுவதற்கு எவ்விதத்திலும் இடம் இல்லை. ஏன்? வித்தும் ஐம்பெரும்பூதங்களும் சரியாக அமைந்திருந்தாலுங்கூட, வித்திலிருந்து வித்து தோன்றியேயாகும் என்ற உறுதிப்பாடு ஒன்றும் இல்லை. இவ்வியற்கையைக கடந்த ஒன்றின் துணை வேண்டும். அது எதுவோ அதுவே வள்ளுவர் குறிக்கும் 'வான்' என நாம் பொருள் கொள்ள நேரிடுகிறது.

சிஇனி இரண்டாவது இடத்தைப்பெறும் வ்ான் றப்பின் ஈற்றுக் குறட்பாவை நோக்குவோம்.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

நீரின்றமையாதுல கெனில் எவ்வளவு சிறந்த, மேலானகுணமுடையவர்களுக்கும் ஒழுக்கம் வான் இன்றி அமையாது.

இக்குறட்பாவிற்கு உரையாசிரியர்கள் கூறும் பொருளை முறையே நோக்குவோம்.

பரிமேலழகர்: எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரையன்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறு தொழுகும் ஒழுக்கும் வானையின்றி அமையாது என்றவாறு.

பொருள்இன்பங்களை 'உலகியல்' என்றார். அவை இம்மைக்கண்ணவாகலின். இடையறு தொழுகுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின்று அமையாது உலகென்பது எல்லாராலும் தெளியப் படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்று அமை யாது தெளியப்படும் என்பார், 'நீரின்றமையாதுல கெனின்' என்றார்.

இதனை 'நீரையின்றி அமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம் பாது' என உரைப்பாரும் உளர்.

மணக்குடவர்: நீரையின்றி உலகம் அமையா தாயின் யாவர்க்கும் மழையையின்றி ஒழுக்கம் உண்டாகாதுஎன்றவாறு.

பரிதியார்: சர்வ ஆன்மாக்களுக்கும் செல்வமின் றியே உலகியல் நடவாததலால், மழையின்றி ஒரு காரணமுமில்லை என்றவாறு.

காலிங்கர்: இவ்வுலகமானது நீரையின்றி அமையாதாயின் இங்குள்ள உயர்ந்தோர் யாவர்க் கும் இழிந்தோர் யாவர்க்கும் மழையையின்றி அமை யாது அவரவரொழுகும் ஒழுக்கு என்றவாறு.

புலவர் **வே. த. அர்ச்சுனனார்:** இருவகையறத் தில் எவ்வகை மேம்பாடு உடையவர்க்கும் உலக

வாழ்க்கை, நீர் இல்லாமல் பொருந்தாது என்ருல் அவ்வாழ்க்கையில் ஒழுக்கமும் நீரில்லாமல் பொருந்தாது.

புலவர் குழந்தை: எத்தகையோர்க்கும் தண்ணீரில்லாமல் உலகியல் நடைபெருதாயின், அத்தண்ணீரின் வருகையும் மழையில்லாமல் உண்டாகாது.

தேவநேயப் பாவாணர்: எத்துணை உயர்ந்தவர்க்கும் நீரின்றி உலகவாழ்வு நடவாதாயின், அந்நீர் இடையருது ஒழுகும் ஒழுக்கும் மழையின்றிநிகழாது.

உலகமெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளும்ஒப்புயர்வற்ற வேந்தனுயினும், மழையின்றி வாழும்வழியில்லையென்பதாம்.

நாகை. சொ. தண்டபாணிப்பிள்ளை: நீர்இல்லாமல் உலகியல் நடவாதாஞல், மழையில்லாமல் ஒழுக்கம் நிலைபெருது.

உணவு உழவு பயிர் முதலியனவெல்லாம் நீராலாலே முதல் ஏழுகுறள்களாலும் விளக்கினுர். மேல் இரண்டு குறள்களாலும் தெய்வ வழிபாடு தானம் தவம் முதலான அறங்கள் நிலைபெறுதல் கூறினுர். இக்குறளால் அவையெல்லாவற்றையும் தொகுத்து உலகியல் ஒழுக்கம் என இரண்டில் அடக்கி அவையிரண்டும் மழையின்றிநடவா எனக் கூறியருளினுர். இவ்வாறு தொகுத்துக் கூறியதிலும் எளிதிலுணரத்தக்கதாகிய நீரின்றி உலகியல் நடவாமையை முன்னர்க்கூறி அதை எடுத்துக் காட்டாக்கி மழையின்றி ஒழுக்கம் நிலையாதென்னும் அரிதுணர் உண்மையை அறிவுறுத்தியமை காண்க.

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்: தண்ணீர் இல்லாமல் உலகவாழ்வு சரிவர நடைபெறமுடியாது என்பது உண்மை எனக்கண்டால் எப்பேர்ப்பட்ட வர்களுக்கும் மழையில்லாமல் இனத்தொடர்பு என்பது ஏற்படமுடியாது என்பது தெளிவாகும்.

டாக்டர். மு. வரதராசனூர்: எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெருது என்ருல், மழையில்லேயாஞல் ஒழுக்கமும் நிலேபெருமல் போகும்.

மேலே கண்ட உரையாசிரியர்களின் கருத்துக் களிலிருந்து, 'வானின்றமையாதொழுக்கு' என்னும் தொடரிலுள்ள 'ஒழுக்கு' என்னும் சொல்லுக்கு அவர்களிடையே கருத்து வேறுபாடு இருத்தலேக் காணுகிரேம். 'ஒழுக்கு' என்பதற்குத் 'தண்ணீர் ஒழுகும் ஒழுக்கு' எனப் பொருள் கொள்ளுவோரும், 'மாந்தர் ஒழுகும் ஒழுக்கம்' எனப் பொருள் கொள்ளுவோருமாகிய இருதிறத்தாரைக் காணு கிரேம்.

உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபடக் கார ணம் என்ன? 'நீரின்றமையாதுலகெனின்' என்ற பகுதியில் இரு சாராருக்கும் கருத்து வேறுபாடு இல்லே. ஆனல் அதனேயடுத்துள்ள 'யார்யார்க்கும்' என்ற தொடரை 'நீரின்றமையாதுலகெனின்' என்பதோடு சேர்ப்பதா? அல்லது 'வானின் றமையா தொழுக்கு' என்பதனுடன் இணைப்பதா? என்பதில் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உள்ளது. கருத்து வேறுபாட்டிற்கான காரணத்தை முதற்கண் நோக்குவோம்.

'யார்யார்க்கும் வானின்றமையா தொழுக்கு' எனச் சேர்த்து, 'ஒழுக்கு' என்பதன் பொருள்

'ஒழுக்கம்' எனக்கொண்டால், 'எப்படிப்பட்டவர்களுக்கும் மழையில்லாமல் ஒழுக்கம் இல்லை' என்ற பொருளைத் தருவதையுணர்ந்த உரையாசிரியர்களுள் சிலர். 'மழையில்லாவிட்டால் எப்படிப்பட்டவர்களுக்கும் ஒழுக்கம் அமையாது' என வள்ளுவர் கூறியிருக்க முடியாது; இங்கு 'ஒழுக்கு' என்னும் சொல்லுக்கு 'ஒழுக்கம்' பொருளாயிருக்க வாய்ப்பில்லை எனக் கொண்டு 'வானின்றமையா தொழுக்கு' என்னும் தொடருக்கு 'மழையில்லாமல் நீர் ஒழுக்கு இல்லை' எனப் பொருள் கொண்டனர்.

இதை மறுக்கும் மற்சாரார்—

'நீரின்றமையாதுலகெனின் வானின்றமையா தொழுக்கு என மட்டுமே வள்ளுவர் கூறியிருப்பாரானல், தண்ணீரின்றி உலகில்லை, மழையின்றி நீர் ஒழுக்கு இல்லை எனப்பொருள் கொள்ளலாம். ஆனல் 'யார் யார்க்கும்' என்னும் தொடரையும் வள்ளுவர் ஆண்டிருப்பதால் 'யார் யார்க்கும் நீரின்றமையாதுலகெனின்' என்று சேர்த்துப் பொருள் காண்பது குறைவுடையதாகத் தோற்றமளிக்கிறது; ஆகவே 'யார்யார்க்கும்வானின்றமையாதொழுக்கு' எனக் கொள்ளுவதே பொருத்தமாகும். 'நீரின்றி உலகில்லை, மழையின்றி யார்யார்க்கும் ஒழுக்கம் இல்லை' எனத் தெளிவாகப் பொருள் முடிகிறது' என எண்ணினர்.

இவ்விரு சாரார் கூறும் பொருள்களையும் நாம் உற்று நோக்குவோம்.

'ஒழுக்கு' என்பதை 'நீர் ஒழுக்கு' எனப் பொருள் கொண்டு கூறும் முதற்சாரரின் கூற்றினை முதற்கண் ஆய்வோம்.

"யார்யார்க்கும் நீரின்றமையாதுலகெனின் வானின்றமையா தொழுக்கு' எனக் கொண்டு, 'ஒழுக்கு' என்பது 'நீர் ஒழுக்கு' எனக் கூறப்படும் கருத்தில் 'யார்யார்க்கும்' என்ற தொடர் பயனற்று நிற்கிறது.

'நீரின்றமையாதுலகெனின் வானின்றமையா தொழுக்கு' எனக் கூறினாலே போதும். அவர்கள் கொள்ளும் பொருள் வந்து விடுகிறது.

> பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
> மக்கட் பதடி யெனல்

எனக்கூறும் வள்ளுவர், பயனற்றமுறையில் சொல்லை ஆண்டிருக்க முடியாது. அடுத்து 'யார்யார்' என்னும் தொடரை வள்ளுவர் தன் நூல் முழுவதிலும் இருமுறை மட்டுமே பயன் படுத்தியுள்ளார். இதைத் தவிர அடுத்த இடம் —

> எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்பதாகும். இவ்விரு இடங்களிலும் இத்தொடரை வள்ளுவர் பயனற்ற முறையில் பயன்படுத்தாது மாறாக அழுத்தப் பொருளில் ஆண்டுள்ளார் என்பது புலப்படுகிறது.

இரண்டாவதாக 'வானின்றமையா தொழுக்கு' என்னும் தொடரும் ஒரு சிறப்புப் பொருளை விளக்குவதாகக் காட்டப்படவில்லை. 'மழையில்லாமல் தண்ணீர் ஒழுகும் ஒழுக்கு இல்லை' என்பது திருவள்ளுவர் சொல்லித்தான் மற்றவர்கள் அறிய வேண்டுமா? அதிகாரத்தின் பொருளை அடக்கிக் கூறவேண்டிய இறுதிக் குறட்பாவினுள் நீர் ஒழுக்கு

சொல்லப்படக் காரணம் என்ன? என்ற வினாவுக்கு ஏற்ற விடை இல்லை.

மூன்றாவதாக 'ஒழுக்கு' என்னும் இச்சொல்லை வள்ளுவர் மற்ற இடங்களில் 'ஒழுக்கம்' என்ற பொருளில் ஆண்டுள்ளாரேயன்றி நீர் ஒழுக்கு' என்னும் பொருள் எங்கும் கொள்ளப்படவில்லை என்பது—

பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு 148.

ஒழுக்காருக் கொள்க ஒருவன் தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு 161.

ஆகிய குறட்பாக்களால் விளங்குகிறது.

நான்காவதாக பாயிரத்தின் நான்கு தலைப்புக் களையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக விளங்கு வது 'ஒழுக்கம்' என்ற இச்சொல்லே யாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார். —கடவுள் வாழ்த்து

நீரின்றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு —வான் சிறப்பு

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு —நீத்தார் பெருமை

அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான் —நீத்தார் பெருமை

அதாவது

ஒழுக்கத்தைக் காட்டியவன் —கடவுள்

ஒழுக்கத்தில் நிலைநிறுத்துவது —வான்

ஒழுக்கத்தின் பொருட்டுப்பிரிந்தவன்—நீத்தார்

ஒழுகிக்காட்டியவன் —அறவோர்.

ஆகவே பாயிரத்தின் நான்கு அதிகாரங்களும் 'ஒழுக்கம்' என்ற சொல்லால் இணைக்கப்படுகின்றன.

'ஒழுக்கு' என்பதற்குநீர்ஒழுக்கு எனப்பொருள் கொண்டால் இத்தொடர்பு துண்டிக்கப்படல் உள்ளங்கை நெல்லிக்கனி

ஆகவே மேலே நாம்கண்ட நான்கு குறிப்பு களிலிருந்து 'ஒழுக்கு என்றும் தொடர் நீர்ஒழுக்கு என்னும் பொருளைத் தராமல், ஒழுக்கம் என்னும் பொருளையே தரும்படியாக வள்ளுவரால் ஆளப் பட்டிருத்தல் வேண்டும் என்பதை அறிகிறோம்.

இப்போது 'ஒழுக்கம்' என்றே பொருள் கொண்ட சாராரின் கூற்றினை ஆய்வோம்.

நீரில்லாமல் உலகம் அமையாது—ஒருதொடர். எத்தகையவர்க்கும் மழையில்லாமல் ஒழுக்கம் அமையாது–பிறிதொரு தொடர். முதல் தொடரைக் காட்டி இரண்டாம் தொடரை விளக்குவதாகச் செய்யுள் அமைந்துள்ளது. ஆகவே இக்குறட்பா வினுள்வள்ளுவர்வலியுறுத்தும்கருத்துஇரண்டாவது தொடரரிலேயே அமைந்துள்ளது.

இரண்டாம் தொடர் எத்தகையவர்க்கும் மழை யில்லாமல் ஒழுக்கம் அமையாது என்பதாகும். இது இவ்வதிகாரத்தின் இறுதிக்குறட்பாவின் இறுதித் தொடராக அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் வான் சிறப்பு என்னும் இவ்வதிகாரத்தில் தான்வலியுறுத்த

எண்ணும் பொருளை வலியுறுத்தி முடித்துக்காட்டு கிறார் எனலாம். ஆகவே இவ்வதிகாரத்தின் முடிவுப் பொருளை அடக்கிக் காட்டுவதாக இத்தொடரை நாம் கொள்ள வேண்டியுள்ளது.

'எத்தகையோர்க்கும் மழையில்லாமல் ஒழுக் கம் அமையாது'.

இக்கூற்று சரிதானா? முறைதானா? எப்படிப் பட்டவரும் ஒழுக்கமுடையவர்களாக விளங்குவதற் குக் காரணம் மழைதானா ? மழையில்லையாயின் எப்படிப்பட்டவர்களுடைய ஒழுக்கமும் நிலைக்காதா? மழை பொருளாதாரச் செழிப்பிற்குக் காரண மானது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அப் படியானால் எப்படிப்பட்டவர்களுடைய கொள்கை யும் பொருளாதார உயர்வுதாழ்வுக்கு அடிமைதானா?

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு 374

எனக்கூறுமிடத்து தெள்ளியரின் நிலை என்ன? அவர்களும் பொருளாதாரமாகிய திருவுக்குட்பட்ட வர்களே என வள்ளுவர் கொள்ளுகிறாரா? அப்படி யானால் அவர்களைத் தனியே பிரிக்க வேண்டிய தேவை என்ன?

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் 131

என்னுமிடத்து, உயர்ந்தது ஒழுக்கமா? உயிரா? என்ற வினாக்களை எழுப்பிய வள்ளுவர், உயிரைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்ததென முடிவு கூறுவது எவ்வாறு? மழை இல்லையானால் சிறந்தவர்கள்

உயிரை இழப்பார்களா? ஒழுக்கத்தை இழப்பார் களா? 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' எனக் கூறும் வள்ளுவர், கடவுளின் ஆணைக் கிணங்க செயற்படும் ஐம்பெரும் பூதங்களுள் ஒன்ருக மட்டும் விளங்கும் மழை, ஒழுக்கத்தை, அதிலும் சிறப்பாக எப்படிப் பட்டவர்களுடைய ஒழுக்கத்தையும் அழித்துவிடும் எனச் செய்யுள் செய்வாரா? என்பன சிந்திக்கத்தக்கவை.

இரண்டாவதாக 'நீரின்றி உலகம் அமையா தெனில்' எனத்தொடங்கியவர், பின்னரும் நீரின் மறுபெயரான மழையையே மீண்டுங் கூறி, மழை யில்லாமல் எப்படிப்பட்டவர்கள் ஒழுக்கமும் அமை யாது எனக் கூறக்காரணம் என்ன? நீர் வேறு, மழை வேரு? நீரில்லாமல் மழையில்லை, மழையில் லாமல் நீரில்லையல்லவா? அப்படியாளுல் மழையும் நீரும் ஒன்றே என்ருகிறதல்லவா? நீரும் மழையும் ஒன்றேயாளுல், நீரின்றமையாது எனக் கூறியவர், மழையின்றி அமையாது என மீண்டும் அதையே திரும்பக் கூறக்காரணம் என்ன?

> **கூறியது கூறல் குற்றமன்று வேருெரு**
> **பொருளை விளக்குங்காலை.**

எனக்கொண்டால், முதல்தொடரில் விளங்காக் கருத்து இரண்டாம் தொடரில் சிறப்பாக என்ன விளக்கப்படுகிறது? ஒழுக்கம் மழையின்றி இல்லை என்னும் கருத்து விளக்கப்படுகிறதெனக் கொண் டாலும், நாம் மேலே பார்த்தபடி 'ஒழுக்கம்' என் னும் பொருள் பொருந்தவில்லையே?

ஆகவே இக்குறட்பாவின் பொருள் எம்முறையிலும் பொருந்தாக் கருத்தாகவே விளங்குகிறது. எனவே வள்ளுவர் இக் குறட்பாவைப் பொருட் குற்றமுடையதாகச் செய்துள்ளாரா? என்பது சிந்திக்கத்தக்கது.

வள்ளுவர் பொருள் குற்றமுடையதாகச் செய்யுள் செய்திருப்பாராஞல் அது இரண்டாயிரம் ஆண்டுகளை எட்டிப் பிடித்திருக்க முடியுமா? ஆகவே வள்ளுவரின் செய்யுள் பொருட் குற்றமுடையதாக இருக்க முடியாது. அதற்கு உரை கண்ட நம்மிடத்திலேதான் பொருள் குற்றமிருக்க முடியும். எனவே உரையில் பொருள் குற்றம் இருக்கிறதா? என நோக்குவோம்.

'வானின்றமையாதொழுக்கு' என்பதே வள்ளுவர் வாக்கு. வள்ளுவர் சொல்லுகின்ற இத் தொடரிலுள்ள 'வான்' என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் அத்தனை பேரும் 'மழை' எனவே பொருள் கொண்டதாலேயே இவ்விடர்ப்பாடு தோன்றியுள்ளமை கண்கூடு. வள்ளுவர் குறிக்கும் 'வான்' என்ற சொல், 'மழை' என்பதைப் பொருளாகக்கொண்டு கூறப்படாமல், கடவுள் வாழ்த்திற்கு அடுத்தும் நீத்தார் பெருமைக்கு முன்பும் வைக்கப்பட்டுள்ளமையால் கடவுளுடன் இணைந்த பொருளில் கூறப்பட்டுள்ளமை கண்கூடு.

3. வாஞேர்

'வான்' என்னும் சொல்லை ஆண்டுள்ள இரண்டு குறட்பாக்களைக் கண்டோம். இப்போது

அதனுடன் தொடர்புடைய 'வானம்' (வான் + அம்) என்ற சொல்லையுடைய இவ்வதிகாரத்தின் இரு குறட்பாக்களை நோக்குவோம்.

தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்.

இச்செய்யுளிலேயுள்ள 'வழங்குதல்' இவ்வதிகார முதற் குறட்பாவிலும் ஆளப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. அங்கு இச்சொல்லுக்கு 'நிலை பெறுதல்' என்ற பொருளைக் கூறிய பரிமேலழகர் இங்கு 'பெய்தல்' என்ற பொருளைக் கூறியுள்ளமை காண்க.

'வான் இன்று ஒழுக்கு அமையாது' எனக் கூறும் வள்ளுவர், 'வானம் இன்றித் தானமும் தவமும் தங்காது' எனவும் கூறுவதிலிருந்து 'வான்', 'வானம்' ஆகியவற்றிற்கு வள்ளுவர் கொள்ளும் பொருள் ஒன்றே என்பது புலப்படுகிறது.

ஏன்?

'தானம்' என்பதற்கு விளக்கம் கொடுக்குங்கால் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள், "தானம் என்பது இதனால் தனதென எதையும் கருதாது தன்னையே பிறர் நலங் கருதி ஒப்படைப்புச் செய்யும் சமுதாயத் தொண்டு குறித்த செயலாகும். கொடைகளின் உச்ச நிலை அறக்கொடை அல்லது கொடை அறம் இதுவே ஆகும்." எனக் கூறுகிறார்கள். ஆகவே பிறர் நலங்கருதித் தன்னையே ஒப்படைத்தவர்கள், மழையில்லாமையால் ஏற்படக் கூடிய பொருளாதார இழிவின் காரணமாகத் தன் நிலையில் இருந்து

பின்னடையமாட்டார்கள். அவர்களுடைய தானம் 'தங்கா' என்ற நிலையை உறுதியாக அடையாது.

அவ்வாறே தவமும். 'தவம்' என்ற தலைப்பில் ஒரு தனி அதிகாரமே அமைத்துள்ளார் வள்ளுவர். அதனுள் —

> தன்னுயிர் தான் அறப் பெற்றானை ஏனைய
> மன்னுயிர் எல்லாம் தொழும். —268

எனக்கூறுமுகத்தான் தவம் செய்பவன் தன்னுயிரைப் பற்றிய பற்றினையும் விட்டவன் என விளக்கம் கொடுக்கிறார். மழையில்லாவிட்டால் உணவுப் பொருள் கிடைக்காது. உணவு உடலை மட்டுமே வளர்க்கக்கூடியது. உடலை மட்டுமே வளர்க்கக்கூடிய மழையில்லாவிட்டால் உயிரினும் சிறந்த 'தவம்' நிலைக்காது என்பது எவ்வாறு பொருந்தும்? தன்னுயிர் தானறப் பெற்றானின் தவம் மழை பெய்யாவிட்டால் எவ்வாறு நிலைக்காது? ஆகவே தானத்தையும் தவத்தையும் தங்க வைக்கவோ அல்லது தங்காமல் செய்யவோ ஆற்றல் பெற்ற 'வான்' மழையினும் மிக உயர்ந்ததாகும். அடுத்த குறட்பாவை இப்போது நோக்குவோம்.

> சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
> வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

வானம் வறக்கு மேல் ஈண்டு வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது. வானோர் பூசனை பெறுவதற்குக்காரணமாய் இருப்பது வான்!

'வான்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்த 'வானம்' என்னும் சொல்லைக் காணுகிறோம், 'வானோர் என்பது வானூர் அல்லது வானவர் என்பதன் திரிபு' என்பது பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் கருத்து. (1 பக் 511).

'வான்' என்பது ஒரு பொருளாகக் காட்டப் பட்டு வருதலை யுணர்ந்த நாம் இப்போது அதனடிப் படையில் ஒரு உயர்திணைப் பலர்பால் விகுதியைக் காணுகிறோம். 'வானவர்' என்பதிலுள்ள 'அர்' விகுதி உயர்திணைப் பலர்பாலையும் குறிக்கலாம்; உயர்திணை ஒருமையை உயர்வுச் சிறப்பு விகுதி யால் அழைத்துமிருக்கலாம். எப்படியும் 'வான்' என்பது என்ன என்பதைநாம் காணுவதற்கு இது துணையாக இருக்கிறது. 'வானோர்' பொருள் என்ன என்பதை நோக்குவோம்.

'வானம் வறக்கு மேல் வானோர்க்கும் சிறப் பொடு பூசனை செல்லாது'.

சிறப்பொடு பூசனை பெறும் தகுதியுடையவர் யார்? சிறப்பொடு பூசனை பெறும் தகுதியுடைய வர் கடவுளே என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. — 358

வான் சிறப்பிலும் இக்குறட்பாவிலும் கூறப் படும் '**சிறப்பு**' தொடர்புடையன. ஆகவே பூசனையைச் சிறப்பொடு பெறும் தகுதி கடவுள்

ஒருவருக்கே உண்டு எனலாம். ‘வானோர்’ என்பது கடவுளைக் குறிப்பது. ‘வான்’ அடிப்படையாகவுள்ள வானோர் கடவுளைக் குறிக்குமானால் ‘வான’ கடவுளுடன் இணைந்த ஒன்றையே குறித்தல் வேண்டும். இக்குறட்பாவின் கூற்றிலிருந்து கடவுளை வணங்குவதற்கும் கடவுளுடன் இணைந்த ஒன்று தேவை என்கிறது.

‘அவனருளாலே அவன்தாள் வணங்கி’ எனக் கூறப்படும் மொழியை இங்கு நினைவு கூறல் பொருத்தம். அவன் தாளை வணங்குவதற்கும் அவன் அருள் வேண்டும், அவன் அருள் இருக்குமானால் அவள் தாள் வணங்கப்படும். அப்படியே வானம் சிறக்கு மேல் வானோர்க்கு ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லும். வானோர் வணங்கப்பட ‘வான்’ வேண்டும் என்கிறது.

ஆகவே கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பு வைக்கப் பட்டுள்ளமைக்கான காரணம் கடவுளை வணங்குவதற்கு ‘வான்’ உதவி தேவை எனக்கூறப்படும் இக்குறட்பாவினால் தெளிவாகிறதெனலாம். கடவுளை மனிதர் வணங்குவதற்குக் காரணமாய் இருப்பது ‘வான்’. அந்த ‘வான்’ கடவுளுடன் மிரு நெருங்கிய தொடர்புடையது. வானுடன் இணைந்து அவர் ‘வானோர்’ என அழைக்கவும் படுகிறார் என்ற குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

கடவுள் வாழ்த்தில் கடவுளுக்கு ‘வானோர்’ என்ற பெயர் வள்ளுவரால் கொடுக்கப்படவில்லை. ஆனால் வான் சிறப்புக் கூறும் இவ்வதிகாரத்தில் சிறப்பொடு பூசனை பெறும் தகுதியையுடைய

வானோர் கூறப்படுகிறது. இவ்வானோர் கடவுளு டன் இணைந்தவராகக் கடவுள் வாழ்த்துக்கு அடுத்த படியாகக் கூறப்படுவதால் கடவுளாகவே கொள்ளப் பட வேண்டியவராகிறார் எனலாம். இருப்பினும் கடவுள் வாழ்த்தில் கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களுள் ஒன்றும் இவ்வதிகாரத்தில் பயன் படுத்தப்படாமையாலும், இவ்வதிகாரத்தில் கூறப் படும் 'வான்' அடிப்படையாகவுள்ள 'வானோர்' கடவுள் வாழ்த்தில் கூறப்படாமையாலும் கடவுள் வேறு, வானோர் வேறு எனவும் கொள்ள நேரிடுகிறது.

எனவே கடவுளும் வானோரும் ஒன்றே, ஆனாலும் கடவுள் வேறு, வானோர் வேறு என்ற கருத்தும் இங்கு தொனிப்பதாகத் தெரிகிறது.

'வான்' உடன் தொடர்புடைய 'வானம்' என்பதையும், 'வானோர்' ஐயும் கண்டோம். இப்போது 'விண்'ஐ நோக்குவோம்.

வான் எனினும் விண் எனினும் பொருள் ஒன்றே.

விண் பொய்த்துவிடுமாயின், பரந்துபட்ட நீரையுடைய விசித்திரமான இவ்வுலகத்தின் உயிர் களுக்குள்ளே நின்று பசி உடற்றும்.

'உடற்றும்' என்பதற்குப் பொருள் கூறுங் கால் 'இது பிறப்புச் சார்ந்த, உயிருடன் உயிரியல் பாகப் பிறந்த வேதனை ஆகும். மேலையுலகக் கிறித்தவ மெய்விளக்க அறிஞர் இதனை ஆதிப்பழி என்பர்' என பன்மொழிப் புலவர் கா. அப்பாத் துரையார் அவர்கள் கூறுகிறார்கள்.

பசி மனிதனுக்கு என்றுமுள்ளது. ஆதிப்பழி ஏற்படுவதற்கு முன்னும் பசி இருந்ததென இறையியலறிஞர் கூறுகின்றனர். ஆதிப்பழி ஏற்படுவதற்கு முன்பிருந்த பசிக்கும், பின்னர் வந்த பசிக்கும் வேற்றுமையுண்டு.

முன்னர் இருந்த பசி மனிதரை வருத்தாத பசி. பசியாகிய உணர்வு வந்தவுடன் அவ்வுணர்வு துன்பமாக மாருவண்ணம் உண்ண உணவிருந்தது. குறைவாக உண்ணுதலோ அல்லது அதிகமாக உண்ணுதலோ இல்லாக் காரணத்தால், குறைவதாலும் மிகுவதாலும் வரக்கூடிய துன்பமும் இல்லை. ஆகவே அப்போதிருந்த பசி, உடற்றும் பசியாக இல்லாமல், அவன் வாழ்வதற்கேற்ற பசியாக இருந்தது.

ஆனல் மனிதன் கடவுள் கட்டளையை மீறி, ஆதிப்பழி வந்தகாலை அப்பசி அவனை வருத்தத் தொடங்கியது.

உணவு கிடையாமையாலும், அதிகம் உண்டாமையாலும் வரக்கூடிய துன்பம் அதிகரித்தது.

ஆகவே பசி உடற்றுவதற்குக் காரணம் ஆதிப்பழியே என்ருகிறது.

இவ்வாதிப்பழியாகிய வேதனைக்கு மருந்தாக விளங்குவதே ‘விண்’ ஆகும். இவ்விண் இன்று பொய்ப்பின் ஆதிப்பழி உடற்றும்.

இக்குறட்பாவில் வள்ளுவர் ஆண்டுள்ள நயம் ஒன்று எண்ணி வியக்கத்தக்கது.

இந்த 'விண்' ஐ மழையாகவோ நீராகவோ பொருள்கொண்டு விடக்கூடாது என்பதற்காகவே வள்ளுவப் பெருந்தகை 'விரிந்துபட்ட நீரையுடைய விசித்திரமான இவ்வுலகம்' என உலகத்தை விளக்கு கிறார். இதன் பொருள் எவ்வளவு அதிகமான தண்ணீர் இருப்பினும் அதனால் யாதொரு பயனும் இல்லை. அத்தண்ணீர் தனித்த நிலையில் பசியைத் தீர்க்கமுடியாது. தண்ணீர் தாகத்தை வேண்டு மானால் ஓரளவு தீர்க்கமுடியும். ஆனால் பசியை, அதிலும் சிறப்பாக உள்நின்று உடற்றும் பசியைத் தீர்க்கவே முடியாது எனத் தெளிவாக விளக்குகிறார். விரிநீர் என்பதற்குக் கடல் எனப் பொருள்கொண்டு கடல்நீரைக்குறைகூறுகின்றனர் உரையாசிரியர்கள். ஆனால் கடல் நீரைப் பொருள்கொள்ளும்படி வள்ளு வர் குறட்பாவில் குறிப்பு எதுவும் இல்லை. கடல் நீர் எனப்பொருள் கொண்டு உப்புநீரின் குறைபாட்டை விளக்குவது எவ்விதத்திலும் பொருத்தமானதாக இல்லை. பசிதீர்க்க முடியா நீரின் குறைபாட்டை, அது எவ்வளவு பரந்து பட்டதாக இருப்பினும் பயனற்ற தன்மையை விளக்கி, உள்நின்று உடற்றும் ஆதிப்பழியை நீக்கும் 'விண்'ணின் சிறப்பை இக் குறட்பாமூலம் வெளிப்படுத்துகிறார் வள்ளுவர்.

இக்குறட்பா மூலம் வள்ளுவர் காட்டும் 'விண்' எவ்விதத்திலும் நீரையோ அல்லது மழையையோ குறிப்பதல்ல என்பது மிகத்தெளிவான தொன்றாகும்.

5. துளி.

வான், விண், இரண்டையும் கண்ட நாம் அவைகளுடன் தொடர்புடைய 'விசும்பு' பற்றி நோக்குவோம். வான், விண், விசும்பு மூன்றும் ஒருபொருட் சொற்களே.

விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலை காண்பு அரிது.

விசும்பின்துளி வீழ்ந்தால் அல்லாமல் ஓரறிவுடைய பசும்புல்லின் தலையையும் காணமுடியாது என்பது இதன் பொருள்.

ஓரறிவுயிராகிய பசும் புல்லின் வளர்ச்சிக்குங் கூட விசும்பின் துளி தேவை எனக் கூறப்படுகிறது. 'துளி' என்பதுஇங்கு மழைத்துளியைப்பொருளாகக் கொள்ள வாய்ப்பு அளிக்கிறது. ஆனல் ஆழ்ந்து நோக்குங்கால் 'விசும்பின் துளி' என்ற தொடரால் வள்ளுவர் மழைத்துளியைப் பொருளாகக் கொண்டு கூறியிருப்பாரா என்பது நோக்கத்தக்கது.

இவ்வதிகார முதற்குறட்பாவில் வானை அமிழ்தமெனக்கூறிய வள்ளுர், இங்கே 'விசும்பின்துளி என அமுதத்துளியைக் கூறுகிருர் எனலாம். ஆகவே அமிழ்தமாக விளங்குவது வான் அல்லது விசும்பு. அதன் சிறுபகுதியே விசும்பின் துளி என்றுகிறது. ஓரறிவுயிராகிய பசும்புல்லின் வளர்ச்சிக்குங் கூட வானமிழ்தத்தின் சிறுபகுதி தேவை.

பன்மொழிப்புலவர் அவர்கள் 'துளி'என்பதற்கு விளக்கங் கொடுக்குங்கால்—

"'துளி என்பது இங்கே பெயர்ச்சொல். இது துளித்தல், துளிர்த்தல்' தளிர்த்தல் என்ற சொற்களையும், பொருள்களையும் நினைவூட்டுவதாயுள்ளது. தளிர்ப்பூட்டும் துளி என்ற குறிப்பு வளம் இதனல் ஏற்படும்"

(மணிவிளக்கவுரை I பக். 484)

எனக் கூறுமுகத்தான் உயிர்களைத்துளிரவைப்பது இவ்விசும்பின் துளி என்ற கருத்து விளங்குகிறது. உடலை வளர்ப்பதற்குப் பயன்படுபவை ஐம்பெரும் பூதங்கள். ஆனால் உயிரை ஆன்மாவைத் துளிர வைப்பது வான் அமிழ்தமாகிய விசும்பின் துளியாகும். விசும்பின் துளி இன்றேல் புத்துயிர் பெற்றுத் துளித்தல் — மாற்றிப்பிறத்தல் — ஆன்ம வளர்ச்சி இல்லை எனலாம்.

இவ்விசும்பின் துளியை வேதத்தின் அமுதச் சொல்லுரு எனப் பொருள்கொண்டு பன்மொழிப்புலவர் அவர்கள் கூறுகிறார்கள்.

'பசும்புல் பாசத்திற்குரிய உயிர்குறிக்கும் என்பது விளக்கவுரையில் குறிக்கப்பட்டுள்ளது. எனவேஇதன் எதிரிணையான **'விசும்பின்' என்ற சொல் இங்கே கடவுளைச்சுட்டுவதாகும்** அதிகாரம் இன்பத்துப்பால்பாயிரமாதலால்,கடவுளின் அருளுரு அதாவது ஆதிபகவனே இங்கே கடவுள் எனக் கருதப்படல்தகும். இதனால் அவ்விசும்பின்துளி— அமுதத்துளி என்பது இங்கே ஆதிபகவன் திருவடியாகிய வேதத்தின் அமுதச்சொல்லுருகுறிப்பதாகும்'

(மணிவிளக்கவுரை I பக் 488)

இவ்விளக்கத்தில் விசும்பு கடவுளைச் சுட்டுவதாகும் என அவர்கள் கொண்டுள்ளமையால், விசும்புடன் இணைந்த விண்,வான் என்பனவும் கடவுளையே சுட்டவேண்டுமல்லவா?

ஆகவே வள்ளுவர் விசும்பு, என்ற சொல்லால் கடவுளையே சுட்டியுள்ளார் என்ற பன்மொழிப் புலவரவர்கள் கூற்றாலும் கடவுள் வாழ்த்திற்கும்,

நீத்தார் பெருமைக்குமிடையே வான்சிறப்பு வைக்கப்பட்டுள்ளமையாலும், இவ்வதிகாரச் செய்யுட்களிலுள்ள வான், விண், விசும்பு முதலானசொற்கள் மழையைப் பொருளாகக் கொண்டு கூறப்படாமையாலும், அவைகடவுளையோ அன்றி அக்கடவுளோடு இணைந்த தொன்மையையோ குறித்தல் வேண்டும் என்பது தெளிவு.

6. புலால்

உழைத்தல், உழத்தல், உழல்தல் ஆகிய சொற்களுக்கும் உழு, உழவு, உழவர் ஆகிய சொற்களுக்கும் தொடர்புண்டு. உழவர், என்பது நிலத்தை உழுகிறவர்களைமட்டுமே பொருளாகக் குறியாது, உழைப்பவர் என்ற பொருளையே கொடுப்பது என்பது—

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. — *872*

என்ற குறட்பாவால் விளங்குகிறது.

நிலத்தில் உழுது பயிரிடுபவர்களை வள்ளுவர் குறிக்குங்கால், அவர்களை 'உழவர்' எனச்சுட்டாது 'உழுவார்' 'உழுதுண்டு வாழ்வார்' 'உழவினர்' என்றே சுட்டியுள்ளார்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. — *1032*

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். — *1033*

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை — *1036*

'உழவர்' என்று வள்ளுவர் தன் நூல் முழுவதிலும் இரண்டே இடங்களில் மட்டுமே குறிப்பிட்டுள்

ளார். அவற்றுள் ஒன்றை மேலேகண்டோம்.(872) வில்லேருழவர் சொல்லேருழவர் ஆகியவை வீரரை யும், புலவரையும் சுட்டினவேயன்றிப் பயிர்த் தொழில் செய்பவரைக் குறிப்பிடவில்லை.

அவர் 'உழவர்' என்றபெயரால் சுட்டும் அடுத்த குறட்பாவே, இப்போது நாம் காணப்புகும் 'வான் சிறப்பு' அதிகாரத்திலுள்ள செய்யுளாகும்.

> ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
> வாரி வளங்குன்றிக் கால்.

'உழவர்' என்ற பெயரால் சுட்டும் (872) முன்னர்ப்பார்த்த செய்யுளில், வில்லேருழவரையும் சொல்லேருழவரையும் குறித்த வள்ளுவர், இச்செய் யுளில் ஏரின் உழும் உழவரைக் குறிப்பிடுகிறார். இங்கு அவர் சுட்டும் ஏரின் உழும் உழவர் யார்? என்பது முதற்கண் நோக்கத்தக்கது. பயிர்த் தொழில்செய்பவர்களைக் குறிக்கும் போது 'உழவர்' என்ற சொல்லை வள்ளுவர் பயன்படுத்தவில்லை என் பதைக் கண்டோம். ஆகவே 'உழவர்'என்ற பொது வான சொல்லால் வள்ளுவர் 'உழைப்பவர்' என்ற பொதுப்பொருளையே சுட்டுகிறார் என்பது தெளிவா கிறது.

உழுதல் என்பது பண்படுத்தல் என்ற பொரு ளைச் சுட்டுகிறது. நிலத்தை உழுது பண்படுத்தலை இது பொதுவாகச் சுட்டினாலும், கரடுமுரடான வன்நெஞ்சை உழுது பண்படுத்திக் கனியவைக்கும் தொழிலையும் உழவு குறிக்கும். சான்றோர் தாங்கள் பண்பட்ட கனிந்த உள்ளத்தைப் பெற்றதோடு அமையாது, மற்றவர்களின் கடின உள்ளத்தையும்

உழுது பண்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவ்வகையில் அவர்களும் உழவர்களே.

'ஏர் என்பது அழகு என்னும் பொருள் தரும். இதனுடன் ஏரணம், ஏராளம், ஏரி, ஆர், ஆரியர்; ஆல், ஆன்றோர்; சால்பு, சான்றோர் ஆகிய சொற்கள் தொடர்புடையவை.'

'சமஸ்கிருதத்தில் 'ஆரிய' என்ற சொல் இவ்வாறு திருவள்ளுவர் வழங்கும் சான்றோர், ஆன்றோர் ஆகியவற்றுடன் தொடர்புடைய சொல்லேயாகும்.'

(மணிவிளக்கவுரை I பக்452.)

சான்றோர் என்பது சால்புடையவர் என்ற பொருளைச்சுட்டி சால்புஎன்பது நிறைந்திருத்தல் என்பதைச்சுட்டுவதனுல் 'சான்றோர்' என்னும் சொல் நிரப்பப்பட்டவர் என்ற பொருள் விளக்கத்தைக் கொடுக்கிறது.

'நிரப்பப்பட்டவர்' என்பது எதனுல் நிரப்பப் பட்டவர்? என்ற கேள்விக்கு இடமளிக்கிறது. நற்குணங்களால் நிரப்பப்பட்டவர் என்ற விடை அதற்குக்கிடைப்பதாயினும், நற்குணங்களுக்கு அடிப்படையான ஏதோ ஒன்றையும் சேர்த்தே அது குறிக்கிறதென நினைக்கவேண்டியுள்ளது. அந்த ஏதோ ஒன்றை, நற்குணங்களுக்குக் காரணமான அதைக் குறிப்பதே 'வான்' என்ற இச்சொல்லாக இருக்கக்கூடும் என்பது எண்ணத்தக்கதாய் உள்ளது.

எவ்வாறு?

'புயலென்னும் வாரிவளங்குன்றிக்கால் உழவர் ஏரின் உழார்' என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே உழவர் ஏரின் உழுவதற்குக் காரணமாய் இருப்பது புயலென்னும் வாரி.

வாரி என்பது வருவது என்ற பொருளேயே குறிப்பதாகும் என்பது பன்மொழிப்புலவர் கருத்தாகும் அதாவது நிலேத்திருக்கும் ஒன்றை இச்சொல் குறியாது வருவதொன்றையே 'வாரி' என்னும் இச்சொல்லால் வள்ளுவர் சுட்டுகிருர் எனலாம்.

அப்படிப் புதிதாக வருவது' என்னசெய்கிறது? என்பதையும் வள்ளுவர் காட்டுகிருர். அது வளத்தைக் கொடுக்கிறது. வளம் என்றசொல் நிலவளத்தை மட்டுமே பொருளாகக் குறியாது, குணவளத்தையும் குறிக்கிறது. ஆகவே குணவளமாகிய நற்குணங்கள் வெளித்தோன்ற ஏதோ ஒன்று வரவேண்டும். என்பதை வாரி வளம்' என்ற சொற்களால் வள்ளுவர் குறிக்கிருர் எனலாம். இவ்வாரி எப்படிப்பட்டது என்பதற்கு விளக்கமாகவே புயலென்றும் வாரி' எனக்கூறுகிருர்.

புயலென்னும் வாரிவளம்—புயலென்று சொல்லப்படுவதாகிய வரக்கூடியவளம்.

'புயல்'என்னும் சொல்லால்வள்ளுவர் குறிக்கும் பொருள் என்ன?

புயல் என்னும் இச்சொல் வள்ளுவரால் இந்த ஒருஇடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. நூலில் வேறெங்கும் பயன் படுத்தப்படவில்லே. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆகிய

ஐம்பூதங்களுள் ஒன்ருக விளங்குவது காற்று· அது புறப்பட்டுவரும் திசைக்கேற்ப தென்றல், வாடை கொண்டல்,கோடை என்ற பெயர்களைப்பெறுகிறது. அது வீசிம்வரும் வேகத்தையும் அளவையும் குறிக்கும் சொல்லாகப் 'புயல்' குறிக்கப்படுகிறது.

'புயல்'என்பது பேரளவில் பெரும்வேகத்துடன் வீசும் காற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும். ஆகவே புயலென்னும் வாரி வளம் குன்றிக்கால்— என்னும் தொடர்; பேரளவில் பெரும் வேகத்துடன் வீசிவரும் காற்று என்னும் புதிதாக வருகின்ற வளம் குறைந்த விடத்து — என்னும் பொருளைத் தருகிறது.

நாம் முன்னர் கண்ட சான்ருேர் தாங்கள் பண் பட்ட கனிந்த உள்ளத்தைப் பெற்றதோடு அமை யாது, மற்றவர்களின் கடின உள்ளத்தையும் உழுது பண்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்றமையின் உழவர் என அழைக்கப்பட ஏதுவாகின்றனர் என் பதைக் கண்டோம். அவ்வாறு அவர்கள் பண்பட்ட கனிந்த உள்ளத்தைப் பெற நற்குணங்களுக்கு அடிப்படையான ஏதோ ஒன்ருல் நிரப்பப்பட்டவர் கள் (சால்பு) என்பதையும் கண்டோம். இப்போது குறட்பாவினை மொத்தமாக நோக்குவோம்.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

பேரளவில் பெரும் வேகத்துடன் வீசி வரும் காற்று என்னும் புதிதாக வருகின்ற வளம் குறைந்த விடத்து நற்பண்பினையும் பண்படுத்தும் தொழிலையுமுடைய சான்ருேர் தங்கள் உழைப் பினைச் செய்யார். ஆகவே சான்ருேரின் சான்ருண்

மைக்கு ஆதரவாய் விளங்கி அவர்களைச் செயல்பட வைப்பது புயலாகிய வான் ஆகும் என்பது வள்ளுவர் கொள்கை எனத் தெரிகிறது.

இங்கே குறிக்கப்படும் புயல் என்னும் வாரி ஐம் பெரும் பூதங்களுள் ஒன்றாகிய காற்றை மட்டுமே பொருளாகக் குறிக்கிறது என்பதும் நோக்கத் தக்கது. வான், விண், வானம், விசும்பு என்பனவற்றுடன் இணைந்ததாக இப்புயல் விளங்குகிறது.

புயல் எனக் குறிப்பிட்டது ஏன்? ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய காற்று உலகெங்கும் பரவியுள்ளது. அக்காற்றினின்றும் சற்று மாறுபட்ட காற்றே புயல் என அழைக்கப்படுகிறது. புயல் பேரளவும் பெருவேகமும் கொண்டதாகும். அப்புயல் அளவு குன்றுங்கால் உழவர் உழார். அளவு எதைக் குறிக்கிறது? கொடுக்கும் அளவா? அல்லது பெற்றுக்கொள்ளும் அளவா? கொடுக்கும் அளவு எனக் கொள்ள வழியில்லை.

புயல் எவ்வளவு பேரளவில் பெருவேகத்துடன் வீசினாலும் அதை ஏற்றுக்கொள்ளா நிலையில் பொருட்கள் உருவாக்கப்படலாம். அந்நிலையில் அளவு குறைவுபடுவதற்குக் காரணம் பெற்றுக் கொள்ளும் இடமேயாகும்.

ஆகவே புயல் என்னும் வாரி வளத்தை உழவர் பெற்றுக்கொள்ளுவதில் குறைவுபட்ட காலை ஏரின் உழார் என்பதாம்.

புயல் என்னும் வாரியால் நிரப்பப்பட்டவர்களே சான்றோர் என்பதும் தெளிவுபடுகிறது.

ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய காற்றைக் குறித்த இக்குறட்பாவில், பிறிதொரு பூதமாகிய

நீரைக்கொண்டுவர எவ்விதத்திலும் இடமில்லை என்பதும் நோக்கத்தக்கது. காற்றின் சார்பாக நீர் இயங்குகிறது எனக்கூறுங்கால், ஐந்து பூதங்களின் கலப்பே இவ்வுலகம் என விளக்கம் வந்து, இவை யொன்றின்றி மற்றவை இயங்கமுடியாது என்பதுடன் இவ்வைம் பெரும் பூதங்களின் ஆளுகையை யுடைய கடவுள் இன்றி இவற்றின் தனி இயக்கமும் இல்லை என முடிவது நோக்கத்தக்கது.

7. தடிந்தெழிலி

எழில் என்பது அழகைக் குறிக்கும் சொல் என்பது—

> நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
> மண்மாண் புனைபாவை யற்று — 407

என்ற குறட்பாவில் நமக்கு விளங்குகிறது.

ஆகவே 'எழிலி' என்பது அழகுடையது என்பதையே பொருளாகக் கொண்டிருத்தல் வேண்டும். எழிலி என்னும் இச்சொல்லை வள்ளுவர் வான்சிறப்பு அதிகாரத்தில் மட்டுமேயன்றி வேறெங்கும் கையாளவில்லை. இப்போது குறட்பாவுக்கு வருவோம்.

> நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
> தான் நல்கா தாகிவிடின்.

எழிலி தடிந்து தான் நல்காதாகிவிடின் நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்.

அதிகாரத்தினுள் இதற்கு முந்திய குறட்பாவினுள் சிறுமையான உயிராகிய புல்லைக்கூறி, விசும்பின் துளியின் தேவையை வற்புறுத்திய வள்ளு

வர், இங்கு பெருமைக்கு எல்லையாகக் கூறப்படும் கடலுக்கும் அவ்வான் தேவை என்பதைக் கூறுகிறார். (கல்விக்கடல், கருணைக்கடல், கடலன்ன காமம், 1137, நன்மை கடலிற் பெரிது 103.) இன்பக்கடல் 1166)

நீர்மைகுன்றும்—தன் தன்மையில் குறைவுபடும். இங்கு கூறப்படும் கடல், கடலை மட்டுமே பொருளாகக் கொள்ளாமல், கடல்போன்ற பெருமையுடன் விளங்கும் வேறொன்றைக் குறித்தது. ஏன்? முந்திய குறட்பாவில் புல் என்பது ஓரறிவுயிராகிய புல்லை மட்டுமே பொருளாகக் கொள்ளவில்லை என்பதை 'இது குழந்தையின் தலைநிலை அதாவது கருத் தன்மையையும், அதன் கடவுட் கருணைப் பான்மையில் இது கடவுளின் கருணையாகிய தாளில் தளைப்படும் உயிரின் அறிவுத்திறத்தையும் குறிக்கும்' (மணிவிளக்கவுரை I 436) எனக் கூறும் பன்மொழிப் புலவர் அவர்கள் கூற்றால் தெள்ளென உணருகிறோம்.

ஆகவே குழந்தையின் தலைநிலை அதாவது கருத்தன்மைக்கு விசும்பின் துளி தேவையாயிருப்பதைப்போன்று அக்கரு, குழந்தையாகி, மனிதனாகி, ஞானியாய் மாறிய காலையும், தடிந்தெழிலி தான் நல்காதாகிவிடின் தன் நீர்மை குன்றும்.

இவ்வதிகாரத்தை மழைச்சிறப்புக்கூறும் அதிகாரம் என உரையாசிரியர்கள் அத்தனைபேரும் கருதி உரை எழுதினமையால், இக்குறட்பாவுக்கும் அதன் வழி நின்றே பொருள் கண்டனர். 'எழிலி' என்பது நேரடியாக மேகத்தைப் பொருளாகக் கொள்ளாவிடினும், சூல் கொண்ட மேகம் அழகுடையது எனக்கொண்டும், நீரைப் பெற்று மேலே

எழுகின்ற காரணத்தாலும் 'எழிலி'க்கு மேகம் எனப் பொருள் கொண்டனர். இருப்பினும் உரையாசிரியர்களுக்கு இடர்ப்பாட்டை ஏற்படுத்திய பகுதி இக் குறட்பாவிலும் உண்டு. 'தன்நீர்மை குன்றும்' என்னும் பகுதிக்கு உரையாசிரியர்கள் தண்ணீர் குறையும் எனவும், தன் தன்மை குறையும் எனவும் பொருள் கூறுகின்றனர்.

'தடிந்து' என்னும் சொல் என்ன பொருளில் வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது என்பதில் உரையாசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உண்டு.

எழிலி தடிந்து தான் நல்காதாகிவிடின்

பரிமேலழகர்: மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்.

மணக்குடவர் : மின்னி மழையானது பெய்யா விடின். ('தடிந்து' என்பதற்குக் கூறுபடுத்து என்று பொருள் உரைப்பாரும் உளர்)

பரிதியார் : மழை பெய்யாவிடில்

காலிங்கர் : பருவங்களின் வந்து பூரித்து மழை வழங்காதாயின்.

தண்டபாணிப்பிள்ளை : மேகம்தான் கடலில் உள்ள நீரை முகந்து குறைத்து அக்கடலின்கண் கொடுக்காவிட்டால்.

தேவநேயப் பாவாணர் : முகில் அதனைக் குறைத்துப் பின்புதான் அதன்கண் பெய்யாது விடின். (கடலைக் குறைத்தலென்பது அதில் நீரை முகத்தல். இது பண்டை நம்பிக்கை)

குழந்தை : முகில் **மின்னி** மழை பெய்யா விட்டால்.

புலவர் டாக்டர் மு.வ. : மேகம் கடலிலிருந்து **நீரைக் கொண்டு** அதனிடத்திலே பெய்யாமல் விடுமானல்.

கா. அப்பாத்துரையார் : மழை முகிலானது முதலில் கடல் நீரைக் **குறைத்துப்** பின் தானே அதனிடம் குறை நிரப்பி மிகையாகவே கொடுத்தருளாமற் போகுமானல்.

மேலே நாம் காணும், உரையாசிரியர் கருத்துக்களினின்று 'தடிந்து' என்னும் சொல்லுக்குக் குறைத்து, மின்னி, கூறுபடுத்து, பூரித்து, நீரைக் கொண்டு, முதலிய பொருள் கூறப்பட்டிருத்தலைக் காணுகிறேம். இவை யாவும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள் என்பது கூர்ந்து நோக்குமிடத்து விளங்குகின்றது. ஆனல் இவை யாவும் மழையுடன் இணையக்கூடியவை. உரையாசிரியர்களின் உள்ளத்தில் மழையைப் பற்றியது இச்செய்யுள் என்ற எண்ணத்தின் காரணமாகக் கூறப்பட்ட பொருள்களாகும் இவை. ஆகவேதான் அவற்றுக்கிடையே வேற்றுமை காணப்படுகிறது.

அடுத்து மழை பெய்யாவிடின் கடல் வளம் இல்லை எனக்கூறும் பொழுது, கடல் இல்லாமல் மழை இல்லை என்பதும் உள்ளடங்கி இருக்கிறது. ஒன்றின் துணையின்றி மற்றது செயல்பட முடியாது என இரண்டையும் ஒரே நிலைக்குக் கொண்டுவந்தாலுங்கூட, மழையின் தொடக்க நிலை, கடல் என்ருகிறதேயன்றிக் கடலின் தொடக்க நிலை மழை என்ருவதில்லை. இந்நிலையில் மழையினும் சிறந்து விளங்குவது கடலாகவே தோற்றமளிக்கிறது.

மழையே இல்லாமல் கடல் நிலைபெற முடியும். ஆனால் கடலே இல்லாமல் மழை நிலைபெற முடியாது என்ற குறிப்பும் தோன்றி, மழையினும் கடல் சிறந்து விளங்குவது தெள்ளெனத் தெரிகிறது.

ஆனால் கடல், நீராவி, மேகம், கார்மேகம், மழை, அருவி, ஓடை, ஆறு, கடல் இவை யாவும் நீரின் சுழற்சியைக் குறிக்கும் நீர்வட்டமேயாகும். இந்நீர் வட்டத்தின் தொடக்கமும், முடிவும் கடலாகக் காட்சியளிக்கிறதேயன்றி மழையாக அன்று. மழை, கடலையும் கடலையும் இணைக்கும் சங்கிலியின் ஒரு கண்ணி மட்டுமேயாகும்.

இங்கு மழை சிறந்ததா? கடல் சிறந்ததா? என்ற வாதத்தில் இறங்குவதைவிட, இவற்றுள் எது தனித்து மற்ற எதன் துணையுமின்றி இயங்கமுடியும்? என்ற வினாவை எழுப்புவது சிறந்தது. மழையோ கடலோ தன்னைத்தானே இயக்கிக்கொள்ள முடியாது. இவை இயங்குவதற்கு வேறொன்றின் துணைவேண்டும். அந்த வேறொன்றாக விளங்குவதே எல்லாவற்றையும் கடந்த நிலையில், மற்றொன்றின் துணையின்றித் தான் இயங்கி அண்டத்தின் மற்ற யாவற்றையும் இயக்கும் ஆற்றலைப்பெற்ற கடவுளாகும். அக்கடவுளின் ஆற்றலின்றி கடலுமில்லை; மழையுமில்லை, உலகமும் இல்லை மற்றொன்றும் இல்லை.

ஆகவே உலக இயக்கத்திற்குக் கண்ணால் பார்த்த அளவில் நினைக்கிறபடி மழை முதன்மையானது என நீங்கள் கருதினால், அந்த மழையின் இயக்கத்தின் அடிப்படைக் காரணமாய் உங்களுக்குத் தோன்றுகிற கடலுக்கும், அதன் தன்மை மாறு

நிலையில் செயல்படுவதற்கு வான் ஆகிய தடிந் தெழிலி முக்கியம். அவ்வான் ஆகிய தடிந்தெழிலி தான் நல்காவிடின் நீங்கள் கண்ணுல் பார்த்து அதன் சிறப்பை அறியக்கூடிய, நெடுங்கடலும் தன் நீர்மையில் குன்றி அழிந்துவிடும் என வள்ளுவர் கூறுகின்றார்.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகிவிடின்

விடும் என்பதில் அழிந்துவிடும் என்ற பொருள் அடக்கப்பட்டிருத்தலை ஆழ்ந்து நோக்குவோர் உணரமுடியும். ஆகவே தடிந்தெழிலியாக விளங்கு வது மழையன்று. அது கடவுளுடன் இணைந்தது. கடவுளின் ஆற்றலாக விளங்குவதென நாம் உணர முடிகிறது.

நல்குதல் என்ற சொல், இவ்வதிகாரத்தின் முதற் செய்யுளிலும், ஒன்பதாவது செய்யுளிலும் கூறப்படுகின்ற 'வழங்குதல்' என்னும் சொல்லுடன் இணைந்த கருத்துள்ளது என்பது நோக்கத்தக்கது.

எழிலி என்ற சொல்லினுள் எழுச்சி, அழகு ஆகிய இரு பொருட்களும் அடங்கி இருக்கின்றன என்பது கொள்ளத்தக்கதே. அப்படியானல் அத னுடன் இணைந்த 'தடிந்து' என்ற சொல் குறித்து நிற்கும் பொருள் யாது? என்று கண்டால் மட்டுமே இதன் முழுப்பொருளும் விளங்கக்கூடும்.

'தடிந்து' என்னும் இச்சொல்லை வள்ளுவர் இக்குறளில் மட்டுமே ஆண்டுள்ளாரேயன்றி வேறெங்கும் ஆளவில்லை. ஆகவே வள்ளுவர் கொள்ளும் கருத்தையறிந்துகொள்ள **திருக்குறளில் துணைக்கருவி இல்லை.**

'சம்பை, வித்துரு, சபலை, தடித்துச், சஞ்சலை. கனருசி, தடி, ஒளி மின்னல்' எனப் பிங்கலந்தை கூறுகிறது. பிங்கலந்தையின் கருத்துப்படி 'தடிந்து' என்பது 'மின்னி' எனப் பொருள்படுகிறது இதையே சில உரையாசிரியர்களும் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

'தடிந்தெழிலி' தானல்காதாகிவிடின் எனக்கொண்டு 'அழகுடைய அது மின்னித் தன்னை வழங்காவிடில்' எனப் பொருள் கொள்ள நேரிடுகிறது.

தடிந்தெழிலி என்பது இவ்வதிகாரத்தில் வள்ளுவர் சிறப்பித்துக் கூறும் 'வான்'ஐக் குறிக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. 10ஆம் குறட்பாவில் அவ்வானைப் புயலென வருணித்த வள்ளுவர் இங்கு, மின்னலாகவும் அழகுடையதாகவும் வருணிப்பதாகத் தெரிகிறது.

8. துப்பு

உரையாசிரியர்கள் அத்தனை பேரையும் திசை திருப்பிவிட்டு மேலே இதுவரை நாம் கண்டு வந்ததைப் போன்று, உரையாசிரியர்களின் உரைகளிலே குறை ஏற்படும்படி செய்த பெருமை இனி நாம் காணப் போகும் இரு குறட்பாக்களையுமே சாரும் எனக் கூறலாம். அவ்வளவு சிறப்புப் பெற்ற குறட்பாக்கள் இரண்டையும் முறையே நோக்குவோம்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உண்பவர்க்குச் சுத்தமான உணவுப் பொருள்களை உண்டாக்கி, அவ்வுணவுப் பொருள்களை உண்பவர்க்குத் தானும் உணவாகி நிற்பதும் மழையே யாகும். ‘துப்பு’ என்பது உணவைக் குறித்த தெனக் கொள்ளப்பட்டது.

உணவு என்ற இந்நிலையில் இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் தொடர்புடையவை. முதற் குறட்பாவில் உலகம் நிலைபெற்று வருவதற்குக் காரணமான வானாகிய அமிழ்தமாம் உணவு கூறப் பட்டது. இக்குறட்பாவில் அமிழதமாகிய உண வாகத் தான் விளங்குவதுடன், இவ்வமிழ்தத்தைப் படைத்ததும் தானே எனவும் கூறப்படுகிறது. மூன்றும் குறட்பாவில் விண்ணாகிய வான் பொய்ப் பின் நீரால் நிறைந்த இவ்வுலகின் உள் நின்று பசி உடற்றும் எனக் கூறப்படுகிறது.

ஆகவே, பசியைத் தீர்க்கக் கூடிய உணவாக விளங்குவதும், அவ்வுணவை ஆக்கியதும், உலகம் நிலைபெறுவதற்குக் காரணமாகிய அமிழ்தமாக விளங்குவதும் வானே ஆகும் என்பது பெறப்படு கிறது. இங்கு, பசி, உணவு, அமிழ்தம் ஆகியவை கூறப்படக் காரணம் என்ன? இவை யாவும் நீடு வாழ்வுக்கு நிலைக்களன் என்பதாலேயே.

வள்ளுவர் ‘**அறம்**’ என அழைக்கப்படும் இந் நூலைச் செய்வதற்குக் காரணம் என்ன? அறத்தைக் காட்டிய அறவோனாகிய, அறவாழி அந்தணனும் இறைவன், அறம் பூண்டு ஒழுகிக் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நின்றவர்களுக்கு நீடு வாழ்வு கிடைக்கும்; அப்பொய்தீர் ஒழுக்க நெறி யாகிய அறத்தைக் கண்டு, மக்கள் அப்பொய்தீர் ஒழுக்க நெறியில் நின்றால் நீடுவாழ்வு அடைவர்.

அம்மக்களுக்கு அந்நீடு வாழ்வை அளிக்கும்படி யான அமிழ்தமாகவும், அவ்வமிழ்தத்தைப் படைப் போனாகவும் விளங்கி, மக்களின் பசியை நீக்குவது வான் ஆகும்.

அவ்வான் இன்றேல், மக்கள், நீடுவாழ்வைக் கொடுக்கும் அமிழ்தமாகிய உணவை உட்கொள்ளா மல் நீடுவாழ்வை இழந்து பசியால் அழிவர்.

அவ்வாறு அவர்களுக்கு அழிவை ஏற்படுத்தக் காரணமானவை எவை? அவைகளே வள்ளுவர் கூறும் இரண்டு வினைகள். இவ்விரு வினைகளே அவர் களை இருளில் சேர்த்து அழிவைக் கொடுப்பவை.

ஒவ்வொரு மனிதனையும் இவ்விருவித வினை களும் பின் தொடருகின்றன. ஒன்று அவன் முன் னோரிடமிருந்து, அவனுடைய பிறவியிலேயே அவனைத் தொடர்ந்து வரும் பிறவி வினை. அடுத்தது அவன் தன்வாழ் நாளில் அறியாமையின் காரண மாகவும், அறிந்தும், துணிந்தும் செய்யும் அறத் திற்கு மாறான மறச்செய்கையால் ஏற்படும் கர்ம வினையாம் பாவ வினை,

இவ்விரு வினைகளினின்றும் மனிதருக்கு விடு தலையைக் கொடுப்பவன் இறைவன் ஒருவனே. இறைவனுடைய பொருள் சேர்புகழைக் கூறுகிறவர் களிடத்து இருளிலே சேர்க்கக் கூடிய இவ்விரு வினை களும் சேர்வதில்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

இவ்விருவினைகளுள் ஒருவன் அறியாமையினின்று தெளிந்து பாவவினையினின்று விடுபடுவதற்கு வழி

காட்டியாயிருப்பவன் இறைவன். அவன் துணையின்றி மறக்கடலாக விளங்குகின்ற பாவவினையினின்றும் விடுதலை பெறுதல் கடினமானது. அரிதானது,

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

மிக முயன்று முயற்சி எடுப்போர் ஓரளவு தன் வாழ் நாளில் தீமையே செய்யாது பாவவினையினின்று விடுதலை பெறலாம். ஆனால் பிறவியில் தொடர்ந்து ஒவ்வொருவனையும் பின்பற்றிவரும் உயிருடன் உயிரியல்பாகப் பிறந்த பிறவிப் பெருங்கடலாக விளங்குகின்ற ஆதிப்பழியினின்று ஒருவன் விடுதலை பெற, எவ்வளவு தான் முயற்சி எடுத்த போதிலும் அவனுக்கு நிச்சயமாக வெற்றியே கிடையாது. அவனுக்குவெற்றி வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுவே இறைவன் அடிகளைச் சேர்தல்.

பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்.

இப் பிறவிப் பெருங்கடலுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை நோக்கினால், இறைவனடி சேர்ந்தார் எவ்வாறு இதை நீந்துவர் என்பது புலனாகும்.

நாம் காணும் ஒரு மனிதன், அவன் ஒருவனை மட்டுமே நமக்கு அறிவுறுத்தாமல், அவன் இவ்வுலகில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த அவனுடைய தந்தை, பாட்டன், முற்பாட்டன், ஆகிய முந்தியகடல்போன்ற தலைமுறையையும், அவனிடமிருந்து இனி தோன்றப் போகிற மகன்,

பேரன் ஆகிய கடல் போன்ற பிந்திய தலை முறையையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக நம் முன் காட்சி தருகின்றான். அகவே அவனுக்குள் ஒரு பிறவிப் பெருங்கடல் அடங்கியுள்ளது. நம்முன் காட்சி தரும் அவனுடைய அங்க அமைப்பு, நிறம், குணம், உடைமை முதலியனவும் அவனுடைய தனி சொத்து அல்ல. அவனுடைய முன்னோரிடமிருந்து பெற்றவை. பின்னோருக்கும் கொடுக்கப்பட இருப்பவை. இவைகளைப் போன்றே முன்னோர் செய்த பழியும் அதாவது தீவினையும் இவனையறியாமலே இவனுக்கு உடைமையாகிறது. இவனுடைய பின்னோருக்கும் அது உடைமையாகச் செல்லுகிறது. இதுவே ஆதிப்பழி அல்லது பிறவிப் பழியாம் பிறவி வினையாகும்.

இப்பிறவி வினையாம் ஆதிப்பழியே ஒவ்வொருவரையும், அவர்களையும் அறியாமல் உள் நின்று உடற்றுகிறது. அவ்வாறு உள் நின்று உடற்றும் அப்பசியை ஆற்ற வியனுலகத்தின் கண்ணுள்ள விரிநீரால் முடியாது. இந்நீர் அவ்வப்போது தோன்றும் உடல் சார்ந்த வயிற்றுப் பசியை மட்டுமே நீக்கும். உள் நின்றும் உடற்றும் பசியை நீக்கி, எவ்வாறு அமிழ்தமுண்டோருக்குச் சாவாமை ஏற்படுகிறதோ அவ்வாறு சாவாமையாகிய நீடுவாழ்வைக் கொடுக்கும் அமிழ்தமாக விளங்குவதே வான். அவ்வானாகிய உணவைத் தயாரிப்பது எவ்வாறு? தயாரிப்பது யார்? எனத்தேடி நீ வேறெங்கும் அலைய வேண்டியதில்லை. அவ்வானாகிய அமிழ்தமாகிய உணவை ஆக்கியதும் உணவாக விளங்குவதும் அவ்வானே யாகும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாயதூஉம் வான்.

வாஞகிய அவ்வமிழ்தம் நீடுவாழ்வளிக்கும் விதம் என்ன? அது உள்நின்று உடற்றும் பசியாம் ஆதிப்பழியாகிய, பிறவிப் பெருங்கடலிலிருந்து விடுதலையைக் கொடுத்து நீடுவாழ்வளிப்பது எவ்வாறு?

மலர்மிசை ஏகிஞன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

இதயத் தாமரையில் ஏகிய அவனது பாதங்களில் நீடுவாழ்வு உண்டு. இதயத் தாமரையில் ஏகும் அவனே, சான்ருேராகிய உழைப்பாளர்களாம் உழவர்களுக்கும் ஆன்மீக வளத்தை யளிக்கும் புயலாகிய வாஞகவிளங்குகின்ருஞ? என்பன சிந்திக்கத்தக்கவை.

இறைவன், சாவையுடைய மனிதனுக்குச் சாவாமையாம் நீடுவாழ்வை யளித்து, அவனுள் நின்று உடற்றும் ஆதிப்பழியாம் பிறவிப் பெருங்கடலிருந்து கரை சேர்த்தது எவ்வாறு?

இங்கே நாம் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே யுள்ள இருவேறு தன்மைகளை நோக்குகிருேம். சாவையுடையவன் மனிதன்; சாவாமையையுடையவன் இறைவன்; சாவையுடைய மனிதனுக்குச் சாவாமையை இறைவன் எவ்வாறு கொடுக்க முடியும்? கொடுத்தான் என வள்ளுவர் கூறுவதால் எவ்வாறு கொடுத்தான் எனவும் கூறியிருத்தல் வேண்டும். வள்ளுவர் கூற்றில் அதற்கான விளக்கம் உண்டா? நோக்குவோம்.

நல்ல கனியை எதிர்பார்த்து மாங்கன்று ஒன்றை நட்டிஞன் தோட்டக்காரன் ஒருவன்.

கன்று வளர்ந்து மரமாகிக் கனியும் கொடுத்தது. ஆனால் அவன் எதிர்பார்த்தது வேறு, நடந்தது வேறு. நல்ல கனியை எதிர்பார்த்தான் ஆனால், அம்மரமோ புளிப்பான தீய கனியைக் கொடுத்தது. அதன் கொட்டையிலிருந்து தோன்றிய கன்றுகளும் அவ்வாறே தீய கனிகளைக் கொடுத்தன.

புளிப்பு மரத்திலிருந்து இனிப்புப் பழம் பெற முடியுமா? புளிப்பு மரத்தின் முந்தைய வரலாறும் பின்னர் வரப்போகும் வரலாறும் புளிப்பாகவே யல்லவா இருக்கும்? அதற்குரிய சக்தியன்றோ அதன் வித்தில் அடங்கியுள்ளது புளிப்புத் தன்மை அமைந்துள்ள வித்திலிருந்து இனிப்புப் பழம் உண்டாக்கும் வித்தை உருவாக்க முடியுமா?

முடியும் எனத்தாவர இயல் கூறுகிறது. புளிப்புத் தன்மை அடங்கிய வித்திலிருந்து, அதன் புளிப்புத் தன்மையை அகற்றி அதனுள் இனிப்புத் தன்மையை ஏற்படுத்த வேண்டுமானால், புளிப்புத் தன்மையற்ற, இனிப்புத் தன்மையையேயுடைய பிறிதொரு வித்தின் உதவி வேண்டும். இனிப்புத் தன்மையேயுடைய பிறிதொரு வித்தின். உதவி இருக்குமானால் புளிப்புத் தன்மை பொருந்திய வித்திலிருந்து இனிப்புத் தன்மை பொருந்திய கனியையும் வித்தையும் உருவாக்க முடியும். இவ்வாறு உருவாக்கும் முறையே 'ஒட்டுமுறை' என அழைக்கப்படுகிறது.

இவ்வொட்டு முறையில் புளிப்புத் தன்மை பொருந்திய பிறவிப் பெருங் கடலையுடைய வித்து தன் தன்மையிலிருந்து மாறுதலடைந்து அதாவது பிறவிப் பெருங்கடலைக் கடந்து இனிப்புத் தன்மையுடைய நீடுவாழ்வை யடைகிறது. அது பிறவிப்

பெருங்கடலைக் கடக்க உதவியதே நல்ல வித்து. ஆகவே ஒரு நல்லவித்து இருக்குமானால் அதனுதவியால், தீய வித்துகளிலிருந்து தோன்றும் அத்தனை மரங்களிலிருந்தும் நல்ல கனிகளைப் பெற முடியும்.

அவ்வாறே பிறவியில் தீயதன்மை கொண்ட அதாவது ஆதிப்பழியையுடைய அத்தனை மனிதராகிய மரங்களினின்றும் தீய தன்மையை மாற்றி நல்ல தன்மையை அமைக்கக் கூடிய ஒருவனே இறைவன். ஆகவேதான் அவன் அடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடலை நீந்துவர் என வள்ளுவர் கூறுகின்றார் (10). நீக்கிய விதம் என்ன? அதையும் நாம் முன்பு கண்ட ஒட்டு முறைப்படியே விளக்குகிறார் வள்ளுவர்.

மனிதர் யாவரும் இயல்பில் தீயதன்மையுடைய மரங்களாயினர். இவர்களின் தீய தன்மையை நீக்க, தீமையில்லா நன்மையே பொருந்திய வித்து ஒன்றின் துணை வேண்டும். அது இம்மரங்களைப் போன்று உருவத்தில் இருந்தாலும் இம்மரங்களில் ஒன்றல்ல, முற்றிலும் மாறுபட்டது. தீயவித்துக் களிலிருந்து நல்வித்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்ற ஒப்பற்ற வித்து. இது ஒப்பற்ற மரத்திலிருந்து வந்துள்ள ஒப்பற்ற வித்து.

மரம் கடவுளெனக் கொண்டால் அம்மரத்தின் தன்மை அத்தனையையும் தனக்குள் அடக்கிய அம் மரத்தினின்றும் பிரிந்து மரத்தை நீத்து வேறிடம் சென்று அங்குள்ள புளிப்புத் தன்மையை யெல்லாம் மாற்றி அமைக்கக் கூடிய ஆற்றலுடன் விளங்கும் வித்தாக விளங்குபவனே வள்ளுவர் போற்றும் நீத்தார். நீத்தார் என்பது பிரிந்தவர் என்னும் பொருளையே கொடுப்பது. ஆகவே கடவுளாகிய

மரத்தினின்று பிரிந்து வந்த வித்தே ஒழுக்கத்து நீத்தார். மணமகனாகிய உலகமாக விளங்கும் கடவுளின் ஒப்பற்ற வித்தாக விளங்குபவனே ஒழுக்கத்து நீத்தார். ஆகவே அவனுடைய ஐம்புலன்களும் மிக உயர்ந்தவை. அது மட்டுமன்று. மற்ற ஐம்புலன்களுக்கும் அருமருந்தாக விளங்குபவை. தானும் நல்ல வித்து. தன்னுடன் சேருவதையும் நல்ல தாக்குவது. உறுதியாகிய வெற்றியையே என்றும் உடைய ஒப்பற்ற, கடவுளின் வித்து அது.

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்.
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

இதற்கு மேலும் விளக்கம் வேண்டுவோர் 'நீத்தார் யார்?' காண்க.

எனவே, வள்ளுவர் கொள்கைப்படி பிறவிப் பெருங் கடலில் தவிக்கும் மக்களின் தன்மையை மாற்றி அவர்களுக்கிருந்த ஆதிப் பழியைத் துடைக்கும் பொருட்டு பிறவியில் எவ்விதக் குற்றமுமற்ற இறைவனுடைய வித்து, இறைவனை நீத்து இவ்வுலகிற்கு வந்தது. வானுலக வித்து பூவுலகில் முளைத்தது. வித்து முளைப்பதற்கு நிலம் தேவை. அம்முறையில் அவ்வித்தையும் ஒரு சிறந்த நிலம் ஏற்றது. அந்நிலத்தில் அவ்வானுலக வித்து முளைத்தது.

இப்பொழுது வித்திலிருந்து மரம் தோன்றி விட்டது. இம்மரத்தின் கிளைகள் யாவும் நற்கனி தரக்கூடிய சக்தியைப் பெற்றவை. ஆனால் மற்ற தீயவித்துக்களிலிருந்து நல்ல வித்தைப் பெற வேண்டுமானால் அங்கு சில செயல்கள் நடத்தப்பட வேண்டும். தீய கன்றும் நல்ல மரமும் இணைக்கப்

பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்பட வேண்டு மானால், அதாவது நல்ல மரத்தின் சாரம் தீய மரத்துடன் இணைய வேண்டுமானால் நல்ல மரத்தின் கிளை தறிக்கப்பட வேண்டும். நல்ல மரத்தின் கிளை தறிக்கப்பட்ட இடமே, தீய மரத்தின் தீய சக்தியை மாற்றும் வலிமையை அடைகிறது. அந்த நல்ல மரம் தறிக்கப்பட்டுத் துன்பத்தை அடையவில்லை யானால், அதனிடமிருந்து நல்ல தன்மையைத் தீய மரம் பெற முடியாது. நல்ல மரம் தறிக்கப்படு மானால் அது தீய விதையிலிருந்து தோன்றிய தீய மரத்திலிருந்து நல்ல கனிகளையும் வித்துக்களையும் தோற்றுவிக்க வல்லதாகிறது. தீய விதையின் பிறவித் தன்மையையே மாற்றி விடுகிறது.

அவ்வாறு பிறவிப் பெருங்கடலாம் ஆதிப்பழியி னின்றும் விடுதலையைக் கொடுப்பவனே நீத்தா ராகிய ஐந்தவித்தவனாகிய கடவுள். (25, 6) ஐந்த வித்தான் நிலையில் நீத்தாரும் கடவுளும் ஒன்றே (ஐந்தவித்தான் யார்? நீத்தார் யார்? காண்க.) கடவுள் மனிதனைத் தோன்றி, மனிதருக்காகத் தன்னைத்தானே அவித்து, அதாவது பலியாக்கி மக்களுக்குப் பிறவிப் பெருங்கடல், பாவக்கடல் ஆகிய இருள்சேர் இருவினையிலிருந்தும் விடு தலையைக் கொடுத்து, அவர்களுக்கு நீடுவாழ்வை யளித்தான்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

தறிக்கப்பட்ட மரம் அழிந்து போகாமல் அதன் மூலம் தன்னுயிர்ச் சக்தியைத் தீய மரத்திற்குச் செலுத்தி மீண்டும் புதுத்துளிரை உண்டாக்கிப் புது நிலை அடைவதைப் போன்று, ஐந்தவித்தானாகிய

கடவுள் தன் ஐம்புலனையும் அவித்துப் பலி யானதுடன் நில்லாமல், தனது ஆற்றல் சிறப்பால் தேவதூதர்களின் தலைவனும் தேவேந்திரன் சான்றாகப் புது நிலையை அடைந்தான்.

ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங்கரி.

இங்கு வள்ளுவர் காட்டும் ஒரு முக்கிய குறிப்பு நோக்கத் தக்கது. ஒன்றன் குற்றத்தை நீக்கும்படி குற்றமற்ற ஒன்றைப் பலியிடுவதே பலிமுறை. குற்ற மற்றது பலியாகும்பொழுது, அது, குற்றமுள்ள தன் குற்றத்தைப் போக்குகிறது. பின்னர் பலியிடப் பட்ட உடல் அப்படியே விடப்படுவதில்லை. அது தீமையை நீக்கும்படியாக உண்ணும் தூய உணவா கிறது. அதை உண்ணுகிறவர்கள் தீமையிலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

ஆகவே, அவ்வலியுணவு தான் தூயதாய் இருப்பதுடன், தன்னை உண்ணுகிறவர்களையும் தூய்மைப்படுத்துகிறது. அப்படிப்பட்ட அமிழ்த மாகிய, அவியுணவாக விளங்குபவனும் கடவுளே. அவன் நீத்தாராகிய வித்தாகிப் பூமியில் தோன்றித் தன்னைத்தானே பலியுணவாக்கினான் (ஐந்தவித் தான்) அப்பலியுணவே அமிழ்தமாக விளங்குவது. உலகம் நிலைபெறத் தான் காரணமாகி வான் நின்று வழங்கி வரும் அமிழ்தம் அதுவே.

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

இறைவனாகிய அவ்வானமிழ்தமே விரிநீர் விய னுலகின் உள் நின்று உடற்றும் பசியாகிய ஆதிப் பழியையும் நீக்குவது.

விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

உண்ணுகிறவர்களுக்குத் தூய உணவைத் தருபவனும், உண்ணுகிறவர்களுடைய உணவாக விளங்குபவனும் அக்கடவுளே.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

'துப்பாயதூஉம்' என்பது இறந்த காலம் சுட்டிற்று. ஆகவே, அவன் மக்கள் என்றும் உண்ணும் அமிழ்தமாகிய உணவை முன்பே தயாரித்துவிட்டான். அமிழ்தமாகிய கடவுளை உண்ணுகிறவர்கள் தீமை நீங்கி வாழ்வடைகிறார்கள். உண்ணாதவர்கள் தங்கள் பிறவிக் கடலும், பாவக் கடலும் ஆகிய இருள் சேர் இருவினையில் அமிழ்ந்து போகின்றனர். ஆகவே பலியுணவாகிய வானமிழ்தத்தை உண்ணுகிறவர்களுக்கு ஆக்கத்தையும், உண்ணாதவர்க்கு அழிவையும் கொடுக்கும் காரணத்தால், கெடுப்பதுவும் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதுவும் எல்லாம் வானமிழ்தமாகிய மழையே யாய் விளங்குகிறது.

கெடுப்பதூவும் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

ஆகவே ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும் வல்ல சக்திவாய்ந்த அவனே எல்லாம் ஆவான் என்பதாம்.

9. மழை

நாம் கடைசியாகக் கண்ட இரு குறட்பாக்களிலும் 'மழை' எனத்தெளிவான சொல் ஆளப்பட்டிருந்தாலும் பொருளில் மழையைக் குறியாமல்

கடவுளைக் குறித்தது ஏன்? மழையைக் குறித்து ''எல்லாம் மழை'' எனக் கூற முடியாதல்லவா? அப்படியானல் மழை இங்கு சுட்டப்படக் காரணம் என்ன? என்பன நோக்கத்தக்கவை.

இவ்வதிகாரத்தை மழைச் சிறப்புக் கூறும் அதிகாரம் என, உரையாசிரியர்களையும் மற்ற அறிஞர்களையும் எண்ணும்படி செய்த சொல்லே இது எனலாம். இச்சொல் மேலேகண்ட இரண்டு குறட்பாக்களிலும் ஆளப்படாதிருக்குமானல், உரையாசிரியர் இவ்வதிகாரத்தை, மழைச் சிறப்புக் கூறும் அதிகாரம் என முடிவு கட்டியிருப்பர் என்பது ஐயமே.

'மழை' என்ற இச்சொல் மழையைப் பொருளாகக்கொண்டு கூறப்படாமல், கடவுளை அல்லது கடவுளுடன் இணைந்த ஒன்றையே பொருளாகக் கொண்டு கூறப்பட்டுள்ளதிலிருந்து, உருவகமாக இச்சொல் பயன் படுத்த பட்டுள்ளமை விளங்குகிறது.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

என்னும் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலுள்ள 'மலர்' என்பதை மலராகிய பொருளைக் குறிக்கும் சொல்லாகக் கொள்ளாமல், மலரின் தன்மையை யுடைய இதயத்தைக் குறிக்கும் சொல்லாகக் கொண்டனர் உரையாசிரியர்.

'மலரின் தன்மையையுடைய இதயத்தை இங்கே வாளா மலர் என்றது உருவக வழக்கு' —மணிவிளக்வுரை 1 பக் 243

'அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்' —பரிமேலழகர்

மலர் உள்ளத்தின் உருவகம்' —புலவர் குழந்தை

'அடியாரின் உள்ளத்தாமரை நோக்கி ஏகுவானை ஏகினான் என்ற இறந்த கால வாய்ப்பாட்டாற் கூறியது, விரைவு பற்றிய கால வழுவமைதி —தேவநேயப் பாவாணர்

'நெஞ்சப்பை தாமரை முக வடிவிற்றாகலான் 'மலர்' எனப் பட்டது' —தண்டபாணிப் பிள்ளை

மலர் எவ்வாறு மலர் போன்ற தன்மையுடைய தாகிய இதயத்தைக் குறித்ததாகக் கொள்ளப் பட்டதோ, அவ்வாறே மழை என்பதும் மழை போன்ற தன்மையுடைய பிறிதொன்றையே பொருளாகக் கொண்டு கூறப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உறுதிப்படுகிறது.

10. யாது?

கடவுளுக்கும், நீத்தாருக்கும், வானுக்கும் இடையே எவ்வித வேற்றுமையுமின்றி, ஒன்றுடன் ஒன்று கலந்துள்ள ஒற்றுமையைக் காணுகிறோம். அப்படியானால் கடவுளும், வானும், நீத்தாரும் ஒன்றே என்றாகிறதல்லவா? அது எவ்வாறு பொருந்தும்? எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள் கடவுள் எனக் கொண்டால், எல்லாவற் றையும் கடந்த நிலையை நீத்து, கடவுளின் வித்தாக, இப்பூவுலகில் ஒழுக்கத்தை நிலை நிறுத்தத் தோன்றியவனே ஒழுக்கத்து நீத்தார் என்றாகிறது. ஆகவே, அருவம்-கடவுள், உருவம்-ஒழுக்கத்து. நீத்தார். அப்படியானால் 'வான்' எது? அது கடவுளுடன் இணைந்தது என்பது மட்டும் திட்ட மாகத் தெரிகிறது. எவ்வகையில் இணைந்தது?

எவ்வகையில் செயலாற்றுவது? என்பதை நோக்கு வோம். வள்ளுவர் சிறப்பிக்கும் வான் எது? எனக் காண வேண்டிய நாம் வான் சிறப்பினுள், வானுக்கு அவர் கூறியுள்ள தன்மைகளை நோக்கு வோம்.

வள்ளுவர் சிறப்பிக்கும் வானின் தன்மைகள்

1. உலகம் நிலை பெறக் காரணமாயிருப்பது.
2. அமிழ்தமாக விளங்குவது.
3. தானே உணவை உண்டாக்குவதாகவும், உணவாகவும் விளங்குவது
4. மழையாக விளங்குவது
5. விரிநீர் வியனுலக உள்நின்று உடற்றும் பசியை நீக்குவது
6. விண்ணாக விளங்குவது.
7. புயலென்னும் வாரியாக விளங்குவது.
8. உழவர் உழுவதற்குக் காரணமானது.
9. கொடுக்கவும் எடுக்கவும் முழு ஆற்றல் பெற்றது.
10. எல்லா வலிமையும் பெற்ற மழையாக விளங்குவது.
11. விசும்பின் துளியாய் விளங்குவது.
12. புல் வளருவதற்குக் கூடக் காரணமாய் இருப்பது.
13. நெடுங்கடலின் நீர்மையையும் குன்றுமல் காப்பது.

14. தடிந்து நல்கும் எழுலியாய் விளங்குவது.

15. வானோர் சிறப்பை ஈண்டு அறிவுறுத்துவது.

16. சிறப்பொடு பூசனை செயல்படக் காரணமானது.

17. தானம் தவம் தங்கக் காரணமானது.

18. வானமாகி நின்று வியன் உலகம் வழங்குவது.

19. யார் யார்க்கும் ஒழுக்கம் அமையக் காரணமானது.

20. வானுகை விளங்குவது.

மேலே குறிக்கப் பட்டுள்ளவைகளிலிருந்து வானின் செயல்களை மட்டும் பிரித்து எடுப்போம்.

வானின் செயல்கள்.

1. உலகை நிலை பெறவைப்பது.
2. உணவைப் படைத்து உணவாய் விளங்குவது.
3. உள் நின்று உடற்றும் பசியை நீக்குவது.
4. இறையடியார்களாகிய உழவரை உழைக்க வைப்பது.
5. அழிக்கவும் ஆக்கவும் வல்ல ஆற்றலுடையது.
6. உயிர்களின் ஆன்மீக வளர்ச்சிக்குக் காரணமானது.
7. வானோர் வழிபட மனிதரை வழிநடத்துவது.
8. தானம் தவம் இரண்டையும் உலகில் தங்க வைப்பது.

9. யார் யார்க்கும் ஒழுக்கம் நிலை பெறக் காரணமானது.

மேலே நாம் காணும் செயல்களை நோக்குமிடத்து, அவை இறைவனின் செயல்களாகவே தோற்றமளிக்கின்றன. இறைவனைத் தவிர வேறெந்த சக்தியும் இவைகளைச் செயல் படுத்த முடியாது என்பதும் தெளிவு. அப்படியானால் வள்ளுவர் சிறப்பிக்கும் வானும் இறைவன் தானா? இறைவனையே சிறப்பிக்கும் பகுதியானால், இறைவனை வாழ்த்தும் பகுதியாகிய கடவுள் வாழ்த்துப் பாடப்பட வேண்டிய தேவை என்ன? கடவுள் வாழ்த்துப் பாடிய வள்ளுவர், மீண்டும் அதே கடவுளையே சிறப்பித்துப் பாடுவாரா? என்பன சிந்திக்கத்தக்கவை.

இக்கேள்விகளை நாம் சிந்திக்கும் பொழுது வான் சிறப்பினுள் வள்ளுவர் கடவுளையே சிறப்பித்துப் பாடியிருப்பினும், கடவுள் வாழ்த்தினுள் கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் ஒன்றும் இதனுள் கூறப் படாமையாலும், இதனுள் கூறப் படும் பெயர்களுள் ஒன்றும் கடவுள் வாழ்த்தினுள் கூறப் படாமையாலும், வானும் கடவுளும் ஒன்றே என்ற நிலையும், ஆனாலும் கடவுளுக்குச் சமமான நிலை என்பதின்றி, அதற்கு அடுத்த நிலையைப் பெறும் தகுதிவாய்ந்த, கடவுளுடன் இணைந்த, கடவுளின் பிறிதொரு நிலை என்பதும் எண்ணிக் காண வேண்டிய தொன்றாக விளங்குகிறது.

பாயிரத்திலுள்ள, கடவுள், வான், நீத்தார் ஆகிய மூன்று பகுதிகளும், கடவுளின் மூன்று நிலைகளை வாழ்த்தும் பகுதியாகவே தோற்றமளிக்

கின்றன என்பது, நாம் முன்னர் கண்ட விளக்கங்களால் தெளிவாகிறது.

கடவுள் எல்லாவற்றையும் கடந்த அருவநிலை என்பது தெளிவு. நீத்தார் என்பது அருவநிலையை நீத்து ஐம்புலனை ஏற்ற கடவுளின் வித்தாகிய உருவநிலை என்பது, 'ஐந்தவித்தான்' என்ற பெயரால் கடவுளும் நீத்தாரும் ஒன்றே எனக்கூறும் வள்ளுவர் கூற்றால் தெளிவாகிறது. அப்படியானால் கடவுள் அருவம்; நீத்தார் அக்கடவுளின் உருவம் என்றாகிறது. அருவமாகிய கடவுளுக்கும் உருவமாகிய நீத்தாருக்கும் இடையே வள்ளுவரால் சிறப்பிக்கப்படும் 'வான்' எது? அது கடவுளின் அருவத்திற்கும் உருவத்திற்கும் இடையே நின்று செயலாற்றும் கடவுளின் பிறிதோர் நிலை. அந்நிலை வள்ளுவரால் எவ்வாறு தெளிவுபடுத்தப்படுகிறதென நோக்குவோம்.

கடவுளின் அருவத்திற்கும் உருவத்திற்கும் இடையேயுள்ள அந்நிலையே, வள்ளுவரால் 'வான்' என அழைக்கப்படுகிறது. ஆகவே நம்மால் புரிந்து கொள்ள முடியா. அந்நிலையை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் என நோக்குவோம்.

11. திறவு கோல்

அந்நிலையை விளக்க வள்ளுவர் வானுக்கு வேறு சில பெயர்களைக் கொடுத்துள்ளார். அவை யாவன.

1	அமிழ்தம்	(11)
2	மழை	(12, 15)
3	விண்	(13)
4	புயல்	(14)

5 விசும்பின துளி (16)
6 தடிந்தெழிலி (17)
7 வானம் (18, 19)

மேலே நாம் காணும் ஏழு பெயர்களுள், வானுடன் தொடர்புடையனவே, விண், விசும்பு வானம் என்பன. இவை யாவும் அண்டவெளி யாம், ஆகாயமாகிய ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றைக் குறிக்கின்றன. ஆகாயம் நம் கண்ணுக் குத்தெரியவில்லை. ஆனால் ஆகாயத்தில் இருப்பவை நமக்குத் தெரிகின்றன. நாமும், நாம் வாழும் உலக மும், இவ்வுலகைப் போன்ற கிரகங்களும் இருப்பது ஆகாயத்திலேதான். ஆனாலும் ஆகாயம் நம் கண் களுக்குத் தெரியவில்லை. ஆகவே ஆகாயமே இல்லை என ஐம்பெரும்பூதங்களுள் ஒன்றான இதை மறுக்கிறவர்களும் உண்டு. அவர்கள் கடவுளை ஏற்றுக்கொள்ளா நாத்திகக் கொள்கையுடைய வர்கள் என்பது அவர்கள் கூற்றால் விளங்குவது. ஆகாயம் இருப்பது நமக்குத் தெரியாமல், ஆகா யத்தில் இருப்பவை நமக்குத் தெரிவதைப் போலவே, கடவுளுடன் இணைந்த 'வான்' இருப்பது நமக்குத் தெரியாமல், இதில் இருப்ப வர்கள் நமக்குத் தெளிவாக வேறுபட்டுத் தெரியும் என்ற முதல் கருத்து இதன் மூலம் நமக்கு விளக் கப்படுகிறது. ஆகவே இதை நாம் ஐம்புலனால் அறிய முடியாது. ஆனால் இதில் நிலைத்திருப்பவர் களாகிய இதையுடையவர்களை நாம் ஐம்புலனாலும் அறிய முடியும் என்பது விளங்குகிறது.

அடுத்து 'விசும்பின் துளி' (16) என்றமை யால் விசும்புபோல் எங்கும் பரவியிருப்பது, என்ப துடன் அமையாது, அது தன் சிறு பகுதியாகிய

துளியால் குறிப்பிட்ட இடங்களில் செயல்படுவதும் உண்டு என்பது புலனுகிறது.

மூன்ருவது குறிப்பாக இருப்பது 'புயல்' (14) விசும்பின் நிலைக்கும் காற்றின் நிலைக்கும் வேற்றுமையுண்டு. இரண்டும் கண்ணுக்குத் தெரியாதவை என்பதுடன் விசும்பு அண்டமுழுவதையும் அடக்கியது; ஆனல் காற்ருே அண்ட முழுவதும் பரவியது அல்ல. அது செயல்படும் குறிபிட்ட இடம் உண்டு. காற்று இருப்பதையும் இல்லாததையும் நாம் அறியமுடியும். ஆ+வே காற்று நம் உணர்வுக்குட்பட்டுச் செய்ல்படுவது. அவ்வாறே வள்ளுவர் குறிக்கும் 'வான்' சில நியதிகளில் நம்மால் உணரக் கூடியது என்பது விளங்குகிறது. காற்று நம் பூமண்டலத்தைச் சுறறியிருப்பினும், அக்காற்றினின்றும் மாறுபட்டுச் செயல்படுவதே புயல். இது அதிவேகத்துடனும் அதிக அளவுடனும் வீசும் பெருங்காற்று ஆகும். இதன் இயக்கம் எல்லோருக்கும் எளிதில் புலனவது. அவ்வாறே புயல் போன்ற இயக்கத்தையுடையது வான் என்பதும் விளங்குகிறது.

நான்காவது குறிப்பாக விளங்குவது 'தடிந்தெழிலி' (17) தடிந்து—மின்னி, எழிலி—அழகுடையது. தடிந்தெழிலி — மின்னழகுடையது. அதாவது கண்ணுக்குப் புலப்படும் நெருப்பாகிய மின்னலைப் போன்ற அழகுடையது. அதாவது தீப் போன்று நின்று காட்சி தராது, தோன்றி மறைவது. மின்னலைப் போன்றது. ஆகவே 'வான்' தோன்றும் இடம் கண்ணுக்கும் புலப்படக் கூடும் என்பதும் விளக்கப் படுகிறது.

ஐந்தாவதாக அது மழை போன்று பொழிவது. நீர் என்றோ, மேகம் என்றோ முகில் என்றோ, கூறுது மழை எனக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. மழை மேலிருந்து பொழிவது. மழை நீராவி என்ற நிலையிலிருந்து,மேகமாகிப் பின்னர் தண்ணீராகப்பொழிவது. ஆனாலும் மழை தண்ணீரைப் பொழிவதே யல்லாமல் தண்ணீர் அல்ல. தண்ணீர்வேறு; மழைவேறு, மழையில் தண்ணீர் உண்டு. ஆனால் தண்ணீரில் மழை இல்லை.

ஆகவே மழை போன்று பொழிவது வான் என்பதும் விளக்கப் படுகிறது.

மேலே நாம் கண்ட ஐந்து குறிப்புக்களையும் முறையே நோக்குவோம்.

1. ஆகாயம் (விசும்பு, விண், வான்)
2. ஆகாயத்தின் ஒரு பகுதி (விசும்பின் துளி)
3. காற்று (புயல்)
4. மின்னல் (தடிந்தெழிலி)
5. மழை

இவ்வைந்து குறிப்புகளில், ஐம்பெரும் பூதங்களுள் நிலம் ஒன்று நீங்கலாக, மீதமுள்ள நான்கு பூதங்களாகவும் 'வான்' விளக்கப் படுகிறது. நிலம் நீங்கலாகவுள்ள நான்கு பூதங்களாக இவ்வான் காட்டப் பட்டாலும், இந்நான்கு பூதங்களின் செயல்களுக்கும், இவ்வானின் செயல்களுக்கும் வேற்றுமையுண்டென்பதும் குறிக்கப் படுகிறது. நான்கு பெரும் பூதங்களும், வானின் செயல்களாக நாம் முன்னர்கண்ட ஒன்பது செயல்களையும் ஆற்றும் வன்மையற்றவை. அவைகளைச் செய்யக் கூடிய ஆற்றலுள்ளவன் இறைவன் ஒருவனே.

ஆகவே இறைவனின் ஆற்றல் சிறப்பாக விளங்கும் வானை விளக்கிக் காட்ட, நிலம் நீங்கலாகவுள்ள நான்கு பெரும்பூதங்களையும் உவமையாகக் காட்டலாம்; அவை போல இருப்பது எனக் கூறலாம் என்பது விளங்குகிறது.

நிலம் நீங்கலாகவுள்ள, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய நான்கு பூதங்களுள் 'வான்' மழையாக உவமிக்கப்பட்டிருந்தாலும் கூட, மழை, நீரினின்றும் சற்று உயர்ந்தது. ஆகவே மழை என்ற விடத்து, அதனினும் தாழ்ந்த நீரைக்கொள்ள முடியாது. நீர் எப்போதும் நிலத்துடன் சேர்ந்தது. மழை நிலத்திலும் உயர்ந்தது. ஆகவே ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றான நிலம் குறிக்கப்படாதது போல நீரும் கொள்ளத் தக்கதல்ல என்பது புலனாகிறது. நீரையும் நீக்கிவிட்டால், எஞ்சி நிற்பது நெருப்பு காற்று, ஆகாயம் ஆகிய மூன்றுமே யாகும். இம் மூன்றையும் அடக்கிய ஒரு பெயர் இருக்குமானால், அது வள்ளுவர் சிறப்பிக்கும் வானுக்குப் பொருந்தும் என்பது விளங்குகிறது. இம்மூன்றும் அடங்கிய ஒன்றே நெருப்பு எனக்கொண்டால், வள்ளுவர், நெருப்பு அல்லது தீ எனக் கூறாது 'தடிந்து' அதாவது மின்னி, எனத்தோன்றி மறையும் வெளிச்சத்தையே கூறியுள்ளமையால், நெருப்பையும் கொள்ள முடியாது. அப்படியானால் எஞ்சி யிருப்பது காற்றும் ஆகாயமுமே யாகும். ஆகாயம் எனக் கூறும்பொழுது 'விசும்பின் துளி' எனக் கூறுவதன் மூலம், ஆகாயத்தின் ஒரு பகுதியையே வள்ளுவர் கொள்ளுகின்றமையால், முழு ஆகாயமும் கொள்ளத் தக்கதல்ல. எஞ்சியிருப்பது காற்று ஒன்று மட்டுமே யாகும். இதிலும், காற்று எனக் கூறாது புயல் எனக் கூறிச் செல்லுகின்றமையால்

முழுக் காற்றையும் குறியாமல், வேகமும் அதிக அளவுமுள்ள காற்று குறிக்கப் படுகின்றமையின், காற்று எனினும் பொருந்தாது. ஆகவே நான்கு பெரும் பூதங்களில் எதன் பெயரால் அதை அழைத்தாலும், அதற்கு முற்றிலுமாகப் பொருந்த வில்லை. ஆனால் நான்கு பூதங்களின் தன்மையையும் பெற்றது அந்த 'வான்'.

மழையைப் போன்றது.— ஆனால் நீரற்றது.
நெருப்பைப் போன்றது.— ஆனால் தோன்றி மறைவது.
காற்றைப் போன்றது.— ஆனால் வேகமும் பேரளவும் கொண்டது.
ஆகாயத்தைப்போன்றது — ஆனால் தனித்து விளங்குவது

மேலே கண்ட குணங்களையுடையது எது? அதுவே வள்ளுவரால் சிறப்பிக்கப்படும் வான்.

மேலே கண்ட அத்தனை குணங்களையும் அப்படியே கொண்டு விளங்கும் சொல் ஒன்று உண்டு. அதுவே 'ஆவி' என்பது. தமிழகராதிகளில் இந்த 'ஆவி' என்ற சொல்லுக்கு, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய நான்கு பூதங்களுடனும் தொடர்புடைய பொருள்கள் குறிக்கப்படுகின்றன.

ஆகவே திருவள்ளுவர் பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களிலும், கடவுள், ஆவி, நீத்தார் ஆகிய மூவரையும், வாழ்த்தியும், சிறப்பித்தும், பெருமைப்படுத்தியும் பாடியுள்ளார் என்பது விளங்குகிறது.

ஆவி என்னும் பொருளிலேயே 'வான்' வள்ளுவரால் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. ஆனால் எவ்வகையிலும்

வான் என்பதற்கு மழை என்பது பொருளாக இருக்க முடியாது என்பதைத் தெளிவாகக் கண்டுள்ளோம். திருவள்ளுவர் கடவுளை, அருவம், ஆவி, உருவம் என்ற மும்மை நிலையில் கடவுள், வான், நீத்தாராகக் காட்டியுள்ளார். எனவே, பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களும் கடவுள் வாழ்த்தாகவே விளங்குகின்றன. பாயிரத்தில் கடவுளை அடுத்து, வள்ளுவர் சிறப்பித்துள்ள பகுதியே அறம். முதல் மூன்று அதிகாரங்களையும், வாழ்த்து, சிறப்பு, பெருமை எனத்தலைப்பிட்ட வள்ளுவர், நான்காவதாகிய அறத்தை, வலியுறுத்தல் எனத்தலைப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து அவருடைய உள்ளக்கிடக்கையும், நூல் இயற்றுவதற்கான காரணமும், நூலின் வரலாறும் நமக்கு விளங்குகிறதெனலாம்.

எவ்வாறு ?

திருவள்ளுவர் இந்நூலை இயற்றக் காரணம், தான் அறிந்த அறத்தை, மற்றவர்களுக்கும், உலகிற்கும், அறிவிப்பதுடன் நில்லாது, வலியுறுத்திக் காட்ட வேண்டும் என்று அவருக்கு எழுந்த பேரவாவேயாகும் என்பது, அறத்திற்கு அவர் கொடுத்துள்ள தலைப்பிலிருந்து விளங்குகிறது. இவ்வாறு 'வலியுறுத்தல்' என்ற சொல்லை அவர் ஆளக் காரணம், அறத்தை அறியாமல் இவ்வுலகம் மற வழியில் சென்று அழிவை அடைவதையும், மெய்யான அறம் எது? அதைக் காட்டியவன் யார்? என்பதை உலகம் அறியாமலும், அறிந்து கொள்ளமுடியாமலும் இருப்பதைக் கண்ட அவர், அறத்தின் வரலாற்றைக் கூறிப் பின்னர் அறத்தையும் கூறி, அதை வலியுறுத்தியுமுள்ளார்

12. வரலாறு

வள்ளுவர் கூறும் அறத்தின் வரலாறு என்ன?

இக் கேள்விக்கு விடையையும் வள்ளுவர் பாயிரத்தி லேயே அடக்கியுள்ளார்.

அன்பு ஒரு பண்பு. அப்பண்பே உருவானால், அவ்வுரு அன்பின் உரு, அன்பே உரு என அழைக்கப்படும். அவ்வாறே அறம் உலகில் நிலை நிற்கும்படியாக அறமே ஒரு உருக்கொண்டுவந்து, அவ்வுரு ஆணுகக் காட்சி தந்தால், அதற்கு என்ன பெயர் கொடுக்கப்படும்? அறம்—அவன் = அற மவன், அறவோன் என்பதாகுமல்லவா?

அவ்வறவோன் எவ்வுயிர் மேலும் செந்தண்மை பூண்டு ஒழுகிக் காட்டியதே, வள்ளுவர் வலியுறுத் தும் அறம். அவ்வறவோன் அந்தணன் எனவும் அழைக்கப்படும் தகுதி பெற்றவன்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண் டொழுகலான்.

ஆகவே வள்ளுவர் வலியுறுத்தும் அறத்தைப் பூண்டு ஒழுகிக் காட்டிய அந்தணனுகிய அற வோனே, இம்மை மறுமை ஆகிய இருமை வகை தெரிந்தவனும், மறுமையை நீத்து இம்மைக்கு வந்து ஈண்டு அறம் பூண்டவனுமாகிய ஒழுக்கத்து நீத்தா ராகும்;

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

அறத்தைப்பூண்டு, ஒழுக்கத்தைக் காட்டும்படி யாக, ஒழுக்கத்தின்பொருட்டுத் தன் அருவத் தன்

மையை நீத்து, உருவத் தன்மையை ஏற்றவனே கடவுளாகிய ஐந்தவித்தான்.

> ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவல் துணிவு

ஒழுக்கத்து நீத்தாராகிய ஐந்தவித்தான், ஒழுகிக் காட்டியதே பொய்தீர் ஒழுக்க நெறியாகும்.

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்ருர் நீடுவாழ் வார்

மக்கள் நீடுவாழ்வடைய வேண்டுமாஞல் ஐந்தவித்தாஞகிய கடவுள், ஒழுக்கத்தின் பொருட்டு அருவத்தை நீத்து, நீத்தாராகி, மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மையாகிய அறத்தைப்பூண்டு ஒழுகிக்காட்டிய, பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்கவேண்டும். அவர்களே அவ்வறவழியாகிய ஒழுக்கத்தில் நிலே நிறுத்துவதே கடவுளின் ஆவியாகிய வான் ஆகும்.

> நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
> வானின் றமையா தொழுக்கு

ஆகவே அழியும் உலகிற்கு அழியாமையைக் கொடுக்க வல்ல, அவ்வறத்தை வலியுத்துக் காட்டுவதே இந்நூலின் நோக்கமாகும். எனவே அறம் வலியுறுத்தப்படுகிறது. அதற்குமுன் அறத்தின் காரணமாக நீடுவாழ்வை அளிக்கும், அறவாழி அந்தணஞகிய கடவுளும், அறமாகிய ஒழுக்கத்தில் நிலே நிறுத்தும் கடவுளின் ஆவியாகிய வானும், அறம்பூண்ட ஒழுக்கத்து நீத்தாரும், வாழ்த்தவும், சிறப்பிக்கவும், பெருமைப் படுத்தவும் படுகின்றனர்.

தமிழ் இலக்கியத்தில் நாம் காணும் மற்ற ஆசிரியர்களின் கடவுள் வணக்கத்திற்கும், வள்ளுவரின் கடவுள் வாழ்த்திற்கும், ஓர் அடிப்படை

வேற்றுமையுண்டு. அதைக் குறித்து மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் கூறுவது:-

"திருக்குறள் கடவுள் வாழ்த்திற்கும் ஏனைய நூல்களின் கடவுள் வாழ்த்திற்கும் வேறுபாடு உண்டு. ஏனைய நூல்களில் எடுத்துக்கொண்ட நூல் இனிது நிறைவேறுதற் பொருட்டும், நின்று நிலவுதற் பொருட்டும் கவிஞர் கடவுளை வாழ்த்துவர். இந்நூலில் கடவுளின் பொது இயல்பும், சிறப்பியல்பும் கூறி, அவரை வாழ்த்துதல் கற்றறிந்த மாந்தர் கடன் என்றும், கடவுளை வாழ்த்துதலின் பயனும் கூறப்படுகின்றன. இதனை ஊன்றியாராயின் கடவுளை வாழ்த்துதலும் தலையாய அறம் அல்லது ஒழுக்கம் என்பது உணர்த்தப் பெற்றதேயன்றி ஏனைய நூல்களைப் போலப் பயன் கருதிக் கடவுளை வாழ்த்தவில்லை."

(திருக்குறள் அழகும் அமைப்பும் பக் 57.)

ஆகவே அறத்தை வலியுறுத்திப்பாட நினைத்த வள்ளுவர், கடவுளை வாழ்த்துதலும் தலையாய அறம் அல்லது ஒழுக்கம் என்பதை இதன் மூலம் உணர்த்துகிறார் என்பது தெரிகிறது.

எனவே, கடவுள், வான், நீத்தார் ஆகிய மும்மையை முதற்கண் வாழ்த்தி, அடுத்து, தான் செய்யப்புகும் பொருளாகிய அறத்தையும் கூறிப் பாயிரத்தை முதற்கண் முடிக்கிறார் வள்ளுவர்.

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்பாகும்

என்ற இலக்கணத்திற்குச் சரியான இலக்கியமாகத் திருக்குறள் விளங்குகிறது. தெய்வ வணக்கம் முதல் மூன்று அதிகாரங்களிலும், செயப்படு பொருள்,

நான்காவது அதிகாரத்திலும் கூறப்பட்டு, தற் சிறப்புப்பாயிர இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கிய மாய் இலங்குகிறது.

முதல் மூன்று அதிகாரமும் தெய்வ வணக்கம் என்பதைப் புரிந்துகொள்ள முடியா நிலையிலேயே, பாயிரத்தை விளங்கிக்கொள்ள முடியா நிலை அறி ஞர் பெருமக்களுக்கு இருந்து வந்தது எனலாம். கடவுள், வான், நீத்தார் என்னும் மூன்று அதிகாரங் கள் மூலமாகக்கடவுளின் மும்மை விளக்கத்தையும், தான் கூறப்போகும் அறத்தின் வரலாற்றையும் வள்ளுவர் கூறுவதுடன் அம்மும்மையை, வாழ்த்த வும், சிறப்பிக்கவும், பெருமைப்படுத்தவும் வேண் டிய தேவையையும் கடனையும் விளக்கிக் காட்டு கிறார்.

ஆகவே பாயிரமாகிய, ஆழம் காணமுடியாப் பெருங்கடலின் ஆழம், இப்போது நமக்கு ஓரளவு விளங்குகிறதெனக் கொள்ளலாம்.

13. எங்கே?

வள்ளுவர் வாழ்த்திய, சிறப்பித்த, பெருமைப் படுத்திய அம்மும்மை விளக்கம் கூறப்படுவது எங்கே ?

கடவுள் கொள்கையையே ஏற்றுக்கொள்ளாத சமண பௌத்த சமயங்களில் இம்மும்மைக் கொள்கையை நாம் காண வாய்ப்பில்லை.

இந்து சமயத்தில் படைத்தல், காத்தல், அழித் தல் ஆகிய மூன்று தொழிலுக்கும் அயன், மால், அரன் ஆகிய மூவரையும் குறிப்பிடுவர். இம்

மூவர்க்கும், வள்ளுவரால் குறிக்கப்படும் மும்மைக் கொள்கைக்கும் எவ்விதத்திலும் தொடர்பில்லாதது டன் திருவள்ளுவர் கூறும் ஐந்தவித்தானை இந்து சமயத்தின் எப்பிரிவிலும் நாம் காண முடியவில்லை.

அடுத்து, சங்க காலத்தில் நம் தமிழகத்தில் பரவியிருந்த கிறித்தவ சமயத்தை நோக்குவோம். கிறித்தவத்தில் கடவுள், நீத்தார், ஆவி ஆகிய கடவுளின் மும்மைக் கருத்துக் கூறப்படுகிறது. கிறித்தவர்கள் கடவுளை வாழ்த்துங்கால் இம் மும்மையையே வாழ்த்துகின்றனர். அவர்களின் வணக்க முறையிலும் இம் மும்மையே இடம் பெறுகிறது.

வள்ளுவர் கடவுள் வாழ்த்திலும் நீத்தார் பெருமையிலும், வாழ்த்திப் பெருமைப்படுத்திய, ஐந்தவித்தான் கிறித்தவர்களின் மும்மையில் ஒன்றாய் விளங்கும் இயேசு பெருமானையே சுட்டுகிறதென்பதை நமது முந்தைய நூலாகிய 'ஐந்தவித்தான் யார்?' காட்டுகிறது. அவ்வாறே பாயிரத்தின் தெய்வ வணக்கமாக விளங்கும் முதல் மூன்று அதிகாரங்களுள் ஒன்றான நீத்தார் பெருமை, இயேசு பெருமானைப் பெருமைப் படுத்திக் கூறும் பகுதி என்பது ''நீத்தார் யார்?'' என்னும் நூலால் விளங்குகிறது.

இப்போது வள்ளுவர் சிறப்பிக்கும் கடவுளின் ஆவியாகிய வானும், கிறித்தவர்களின் இறைவனின் மும்மைக் கருத்தோடு பொருந்திய ஆவியும் ஒன்றுதானா? என்பதை நோக்குவோம்.

வள்ளுவர் சிறப்பிக்கும் வாலுகிய கடவுளின் ஆவி, உரையாசிரியர்களால் மழையே என எண் ணும்படி, ஆவியா? மழையா? எனப் பிரித்து அறிய முடியாத அளவுக்கு இணைந்து காணப்படுகிறது.

கிறித்தவர்களின் இறைவனின் மும்மைக் கருத் தோடு பொருந்திய ஆவியும், அவ்வாறு விளக்கப் படுகிறதா? என்பது நோக்கத் தக்கது.

கிறித்தவர்களின் வேத நூலாகிய **விவிலியத்தில் கடவுளின் ஆவியைக் குறித்த சில பகுதிகள்.**

'தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் **ஊற்றுவேன்.** உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்திதானத்தின்மேல் என் ஆசீர்வாதங்களையும் **ஊற்றுவேன்**'.

ஏசாயா 44 : 3

'இதோ இறுதி நாட்களில் எல்லார் மேலும் என் ஆவியைப் **பொழிவேன்**'

அப்போசுத்தலர் 2 : 17

'இங்ஙனம். கடவுளின் வல்லமையால் உயர்த் தப்பெற்ற அவர், வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி யைத் தந்தையிடமிருந்து பெற்றுப் **பொழிந்தருளி ஞர்**'

அப் : 2 : 33

'பரிசுத்த ஆவியாம் திருக்கொடை புறவினத் தார் மேலும் **பொழியப்படுவதைக்** கண்டு, இராயப்ப ருடன் வந்த யூத மக்கள் அனைவரும் திகைத்து நின்றனர்'

அப் : 10 : 45

'நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது'

உரோமர் 5 : 5

நாம் மேலே காணுபவை பரந்துபட்ட கடலென விளங்கும் விவிலியத்தின் சில பகுதிகளே. இங்கு ஆவியை மழையைப் போலவே பொழிவதாகக் கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது கிறித்தவர்கள் கடவுளைத் துதித்துப் பாடும் பாக்களிலும் ஆவியை மழையாக உவமித்தும், உருவகித்தும் பாடுகின்றனர்.

''ஆவியை மழைபோலே யூற்றும்''

''ஆவி அருள் மாரி பொழியவே''

(கிறித்தவ கீர்த்தனை 116)

வள்ளுவரின் வான் சிறப்பும், கிறித்துவர்களின் பரிசுத்த ஆவிச் சிறப்பும் ஒற்றுமையுடனேயே காணப்படுகின்றன. இரண்டிலும் மழைக் கருத்து முக்கிய இடத்தைப் பெறுகிறது. இம் மழை, நீர் மழையன்று; பரிசுத்த ஆவியாகிய மழை என்பதும் விளக்கப்படுகிறது.

வள்ளுவர் காட்டும் 'வான்' நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய நான்கு பெரும் பூதங்களுடனும் இணைத்து விளக்கப்பட்டதென்பதை முன்னர்க் கண்டோம். அக்கருத்து விவிலியத்திலும் உண்டா? என்பதை நோக்குவோம்.

'பெந்தெகொஸ்தே என்னும் திருநாளின் போது அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடி

யிருந்தார்கள். திடீரென, **பெருங்காற்று** வீசுவது போன்ற இரைச்சல் **வானத்திலிருந்து உண்டாகி** அவர்கள் இருந்த வீடு முழுவதும் ஒலித்தது. **நெருப்புப் போன்ற நாவுகள்** அவர்களுக்குத் தோன்றிப் பிளவுண்டு ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கின. எல்லாரும் பரிசுத்த ஆவியால் **நிரப்பப்பெற்று** ஆவியானவர் அருளியபடி அயல் மொழிகளில் பேசத் தொடங்கினர்'.

அப். 2 : 1–4.

விவிலியம்	**குறள்**	**பூதம்**
நிரப்பப் பெற்று	— மழை	— நீர்
நெருப்புப்போன்ற நாவுகள்	— மின்னல்	— நெருப்பு
பெருங்காற்று	— புயல்	— காற்று
வானத்திலிருந்து உண்டாகி	— வானம்	— ஆகாயம்

மேலே நாம் காணும் விளக்கம், கடவுளின் ஆவியை விவிலியமும் வள்ளுவமும் ஒரே நிலையிலேயே விளக்குகின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அடுத்து ஐந்தவித்தானாகிய கடவுள் **தானே உலக மக்களுக்கு உயிர்தரும் அமிழ்தமாக** விளங்குவதைக் கூறும் விவிலியப்பகுதி:-

'நானே (இயேசு கிறித்துவே) உயிர் தரும் உணவு. பாலைவனத்தில் உங்கள் முன்னோர் மன்னாவை உண்டனர்; ஆயினும் இறந்தனர். ஆனால் நான் குறிப்பிடும் உணவை உண்பவன் சாகான். இதற்காகவே இவ்வுணவு வானின்று இறங்கியது. நானே வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு.

இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என்தசையே'.

அருளப்பர் 6 : 48 - 51

'உயிர் அளிப்பது ஆவியே. ஊனுடல் ஒன்றுக்கும் உதவாது. நான் (இயேசுகிறித்து) சொன்ன சொற்கள் உங்களுக்கு ஆவியும் உயிருமாகும்.'

அருளப் 6 : 63

திருவிழாவின் இறுதியான பெருநாளில் இயேசு எழுந்து நின்று உரத்த குரலில்,

" யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும் என்னில் விசுவாசங் கொள்பவன் குடிக்கட்டும். மறை நூல் கூறுவதுபோல், அவனுடைய உள்ளத்திலிருந்து உயிருள்ள நீர் ஆருய்ப் பெருக்கெடுத்து ஓடும்' என்ருர். தம்மில் விசுவாசங் கொள்வோர் பெறப்போகும் ஆவியானவரைக் குறித்து அவர் இவ்வாறு கூறிஞர்".

அருளப்பர் 7 : 37–39

இறைத்தொண்டர்களை உழவர்களாகக் காட்டுதல்:—

'பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று, யெருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் (இயேசுவின்) சாட்சிகளாயிருப்பீர்கள்.'

(அப் 1 : 8)

'ஆண்டவர் அருளியவாறு அவனவன் பணி யாற்றுகிறுன். நான் (சின்னப்பர்) நட்டேன். அப்பொல்லோ நீர் பாய்ச்சினுன்; ஆனுல் விளையச் செய்தவர் கடவுள்தாமே. ஆதலின் நடுகிறவனுக்கு என்ன பெருமை? நீர் பாய்ச்சுபவனுக்கு என்ன பெருமை? விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை எல்லாம்.

நடுகிறவனும், நீர்பாய்சுபவனும் ஒன்றுதான். ஒவ்வொருவனும் தன் உழைப்புக்கேற்பத் தனக்குரிய கூலியைப் பெறுவான். ஏனெனில், நாங்கள் கடவுளோடு உழைப்பவர்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் பண்ணை. கடவுள் எழுப்பும் கட்டடம்'.

1 கொரிந்தியர் 3 : 6–9.

மனிதனின் இயல்பான **தீமையை நீக்கி**, தானம் தவம், ஒழுக்கம் ஆகியவை அவனுள் நிலைபெறும் படிசெய்து, அவனுக்கு **நீடு வாழ்வளிப்பது பரிசுத்த ஆவி** எனக்கூறும் விவிலியப்பகுதி:–

'கடவுளிடமிருந்து பிறந்தவன் பாவஞ்செய்வதில்லை. ஏனெனில் அவர் இட்ட 'வித்து' அவனுக்குள் நிலைத்திருக்கிறது. அவன் பாவத்தில் வாழ முடியாது.'

1 அருளப்பா 3 : 9

'வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமானவையே. (நல்ல) ஒலிவ மரத்தின் கிளைகள் சில தறிக்கப்பட்டபின், காட்டொலிவ (கெட்ட) மரக்கிளையாகிய நீ அந்த ஒலிவ மரத்தில் ஒட்டப்பட்டு, அதன் வளமார்ந்த வேரோடு பங்கு பெற்றுய்.'

உரோமர் 11 : 16–17

'நான் (இயேசுகிறித்து) திராட்சைச் செடி. நீங்கள் அதன் கிளைகள். ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். ஏனெனில் என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.'

அருளப்பர் 15 : 5

'நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.'

உரோமர் 5 : 5

'கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்தோம். ஆகவே நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம் உயிரைக் கொடுக்கவேண்டும்.'

1 அருளப்பர் 3 : 16

'உண்மையின் ஆவியானவர் வந்தபின் நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்.'

1 அருளப்பர் 16 : 13

'கண்ணுக்குப் புலப்படாதது, காதுக்கு எட்டாதது, மனித உள்ளத்தில் எழாதது, கடவுள் தமக்கு அன்பு செய்கிறவர்களுக்காக ஏற்பாடு செய்தது.' இதைக் கடவுள் தம் ஆவியின் வழியாய் நமக்கு வெளிப்படுத்தினார்'

1 கொரிந் 2 : 9-10

'மனித இயல்பால் மட்டும் இயங்குபவன் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்ளுவ

தில்லை. அவை அவனுக்கு மடமையாகத் தோன்றும். அவற்றை அவனால் அறியவும் இயலாது. ஏனெனில் தேவ ஆவியைக் கொண்டுதான் அவற்றை மதித்துணர முடியும்.'

1 கொரிந்தியர் 2 : 14

திருக்குறளின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒப்புமைப் பகுதியை விவிலியத்தில் ஏராளமாகக் காணலாம் இங்கு விரிப்பின் பெருகும்.

இதுவரை நாம் கண்டவைகளிலிருந்து வள்ளுவர் சிறப்பிக்கும் வானும், கிறித்தவர் போற்றும் கடவுளின் ஆவியும் ஒன்றே எனக் கொள்ளவேண்டியவர்களாகிறோம்.

அவ்வாறு வான், கடவுளின் ஆவியே எனக் கொள்ளப்படுமானால், பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களும், நமது முந்திய நூல்களாகிய, ஐந்தவித்தான் யார்? நீத்தார் யார்? ஆகிய இரண்டுக்கும் விடையாக விளங்கும், மகனாகிய இயேசுவுடன் இணைந்து, தந்தை, ஆவி, மகன் ஆகிய மும்மையை விளக்குவதாக முடியும்.

முடியவே, கடவுள், வான், நீத்தார் ஆகிய மும்மையாக விளங்கும் தெய்வத்தை வணங்கிப் பின்னர், அம்மும்மையால் பொய்தீர் ஒழுக்கநெறியாகக்காட்டபட்ட, அறமாகிய செயப்படு பொருளை வலியுறுத்திப் பாயிரத்தை முடிக்கிறார் வள்ளுவர் என்பதுடன்—

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற் சிறப்பாகும்.

என்ற இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியமாயும் இலங்குகிறது திருக்குறள்.

அவ்வாறு வான் கடவுளின் ஆவியே எனக் கொள்ளாக்கால் கீழ்க்காணும் வினக்கள் எழு கின்றன...

1. பாயிரத்தில் கடவுள் வாழ்த்தையும், அறன் வலியுறுத்தலேயும் தவிர, மீதி இரண்டு தலைப்புகளும் ஏன்?
2. வானை மழையாகவும், நீத்தாரைத் துறவி யாகவும் கொண்டால், மழையையும் துறவியை யும் பாயிரத்தில் சிறப்பித்தும், பெருமைப் படுத் தியும் பாடவேண்டிய தேவை என்ன?
3. மழையையும் துறவியையும் கடவுளுடன் இணைத்துச் சிறப்பிப்பது பொருந்துமா?
4. ஐம்பெரும் பூதங்களுள் மழையைத் தவிர மீதி நான்கு பூதங்களும், துறவறத்தின் மறு கூறு கிய இல்லறமும் இழிவு பட்டவையா?
5. வள்ளுவர் அவ்வாறுதான் கருதுகிருரா? நூலுள் ளும் அவ்வாறே கூறியுள்ளாரா?
6. பாயிரத்தில் வான் சிறப்பு ஏன்?
7. வள்ளுவர் சிறப்பிக்கும் வான் எது?
8. வான் மழையானுல் உள்ளே தோன்றும் பொருள் குற்றம் யாருடையது?
9. குற்றம் வள்ளுவருடையதா?
10. குற்றம் எங்கே?

வள்ளுவர் சிறப்பிக்கும்

வான் எது?

ஆசிரியரின் வெளியீடுகள்

1.	திருவள்ளுவர் கிறித்தவரா ?	3 50
2.	ஐந்தவித்தான் யார் ?	1 00
3.	'நீத்தார்' யார் ?	1 00
4.	'வான்' எது ?	1 00
5.	சான்றோர் யார் ?	அச்சில்
6.	இருள்சேர் இருவினை எவை ?	,,
7.	இன்பத்துப்பால் ஏன் ?	,,
8.	புலால் மறுத்தல் சைவமா ?	,,

* * *

கிடைக்குமிடங்கள் :

மெய்ப்பொருள் பதிப்பகம்,
2-A, அப்பாத்துரை நாய்க்கர் தெரு,
சென்னை-23.

பாரி நிலயம்,
பிராட்வே, சென்னை-1.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
பிராட்வே, சென்னை-1.
திருநெல்வேலி-6. மதுரை-1. கோவை-1.

நல்லாயன் பண்ணை,
அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.

கிறித்தவ இலக்கிய சங்கம்,
பார்க் டவுன், சென்னை-3.

தமிழ் இலக்கியக் கழகம் [T. L. S.]
திருச்சி-1.